REGD M. 4642.

...விபரம்
—
...ண்டு ரூ 7,
...380

# திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் | மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 28-8-49 | இதழ் 9

## மாஜி கடவுள்கள்

2.



ஹீராதேவி

# மாஜி கடவுள்கள்

[C. N. A.]

ஹீரா, ஜூவசுக்குத் தங்கை; தங்க நிறமும் ஆவலைத் தூண்டும் பேரழகும், கண்டோர் கைகூப்பி நிற்கும் எண்ணம் கொள்ளத் தக்க கெம்பீரமும், கொண்ட அம்மை! பெருங்கவியாம் ஹோமர், (Homer) "காளைக்கண்ணழகி" என்று வர்ணித்திருக்கிறார்! நமது நாட்டுக் கவிவாணர்கள், 'கமலக்கண்' என்பார்கள், ஏனோ தெரியவில்லை, அவர், அம்மையைக் 'காளைக் கண்ணழகி' என்றுரைத்தார்; கணவனின் கர்மாந்தகாரத்தைக் கண்டிப்பதிலும் அவனுடைய காமக்கூத்துக்கு இணங்குபவர்களை வாட்டி வதைப்பதிலும், ஹீரா, திறமைசாலி; கண், காளைக்கு இருப்பது போல இருந்ததால் போதும்!

ஹீரா, ஜூவசின் தங்கையாகப் பிறந்து வளர்ந்து வந்தார்— ஆனால் ஜூவஸ், ஹீராவைத் தாரமாக்கிக் கொண்டார்; தேவன், தேவி, என்ற முறையில், அரசோச்சலாயினர்.

ஹீரா தேவியாருக்கு, 'ஸ்வர்ண சிம்மாசனம்'! பசு, மயில், குயில், இவை மூன்றும், தேவியினால், உத்தமமானவைகளாகக் கருதப்பட்டன.

ஜூவஸ், ஹீரா, திருமணம், மிக மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கலியாணத் தோட்டத்திலே, கடவுட் கூட்டம், களிநடமாடித் தம்பதிகளைப் புகழ்ந்து பாராட்டினர்! பூமியும் பூரித்தது இத் திருமணச் 'சேதி' கேட்டு; பொன் ஆப்பிள்கள் காய்த்துக் குலுங்கும் ஒரு அற்புதமான மரம், பூமியிலிருந்து திடீரென முளைத்ததாம்.

தங்கை தாரமானாள்! தயாபரனின் திருவிளையாடல்! பகுத்தறிவுத் துறையினர், ஆராய்ச்சியாளர் என்போர் மட்டுமல்ல, சாதாரண மக்கள் கூட இன்று, இச்செய்தியைக் கேள்விப்பட்டால், பதைப்பர், அருவருப்படைவர்; "இது என்ன கடவுளய்யா,!" என்று கடிந்துரைப்பர். எவனோ கருத்துக் குழப்பமுடையோன், கட்டிவிட்ட கதை இது, கடவுளின் குணமும் இலட்சணமும் அறியாதவன் எவனோ தீட்டிவைத்த தீய ஏடு, என்று தீர்ப்பளிப்பர். ஆனால் அன்று! ஆத்திகத்தின் அடையாளமே, அந்தத் தேவமாக் கதையைப் பக்தியுடன் ஏற்றுக் கொண்டு, பாராயணம் செய்வதுதான். ஜூவசைத் தொழுவது போலவே, ஹீராவையும் பூஜிக்க வேண்டும்; இருவருக்கும் திருமணம் நடைபெற்றதே, கேட்பதற்கே கர்ண கடூரமாக இருக்கிறதே என்று எண்ணுபவன் பாவி; சொல்லத் துணிபவன் சொல்லொணாச் சித்ரவதைக்கு ஆளாக்கப்படுவான், பக்தர்களால்! பூஜாரி பூபதியிடம் புகார் கூறுவான், "மன்னவா! மாபாவி ஒருவன்; ஹீரா மாதாவைப்பழித்துப் பேசுகிறானாம்! இம்மண்டலம், அழிந்துபடும், மாதா கோபங் கொண்டால். தேவியாரின் திரு அருளால் தான் தாங்கள் மன்னரானீர்! மண்டலம் செழிப்புடன் இருக்கிறது. மாபாவியை, இன்றே, கொன்றுவிடு, மாதாவின் கோபம் கிளம்பாமுன்; நாத்திகம் பரவாமுன்; நாசம் உன்னையும் உன் நாட்டையும் தொடாமுன்பு!" பூபதியும், "அந்தப் புத்தியற்றவனை இழுத்து வா!" — என்று உத்தரவிடுவான்; சந்தேகம் பேசியவன், தலை உருளும் கீழே! அது அந்த நாள் நிலை— ஆத்திகம்.

ஹீரா தேவியார், அண்ணனை நாயகனாகக் கொண்டு அண்டத்தை ஆளும் நிலையைப் பெற்று இருந்த போதிலும், அவர்களுக்கு, அடிக்கடி தொல்லையும் துயரமும், வந்தபடியே இருந்தன. ஏன்! கணவனின், குணம், ஒருமாதிரி! கட்டழகி எங்கு இருந்தாலும்—தேவலோகமானாலும் பூலோகமானாலும், ஜூவஸ் தேவனுக்கு, காதல் பிறந்துவிடும். முறையா? சரியா? தன் உயர்நிலைக்கு ஏற்றதாகுமா என்பது பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கமாட்டார்— சாமான்ய மக்களல்லவா, இவைகளைப் பற்றி யோசிக்க வேண்டியவர்கள்! மூல தேவனுக்குமா, இது! செச்சே! அவர், கடவுள் — எனவே, கட்டுத்திட்டம்—நீதி நேர்மை இவைபற்றிக் கவனிக்க வேண்டியவரல்ல — கண்ணைக் கவர்ந்தாள் ஓர் காரிகை என்றால், அவள் கடவுளுக்கு அர்ப்பணம் தான்! விடமாட்டார் ஜூவஸ்! அவருடைய இந்தக் காதல் விநோதம், பல விபரீதங்களுக்கு இடமளித்தது.

ஹீரா தேவியாருக்குக் கோபமும், பொறாமையும் ஆத்திரமும், வராமலிருக்குமா! பேரழகி நானிருக்க, இவர், வேறோர் மங்கையை நாடுவதா! அவள்தான், என்ன எண்ணுவாள், என்னைப்பற்றி! அவனிதான், என்ன எண்ணும்? ஜூவஸ், ஹீரா இருக்க, வேறோர் பெண்ணைத்தேடி அலைகிறார்-ஆகவே, ஹீரா, ஒருசமயம் அவலட்சணமோ!—என்று கூடப் பேதைகள் பேசக்கூடுமே. ஜூவசின் காதலைப்பெறும் காரிகை, கர்வமும் அடையக்கூடுமே — ஹீரா தேவியை விட நான் அழகு வாய்ந்தவளாக இருப்பதால்தான், ஆண்டவன், நம்மை நாட நேரிட்டது—என்றல்லவா எண்ணி ஆணவம் கொள்வாள் —எப்படி இதைச் சகித்துக் கொள்வது! ஏன் சகித்துக்கொள்ள வேண்டும்? என் உரிமையை ஏன் இழக்க வேண்டும்? என்றெல்லாம் எண்ணி, ஹீரா தேவியார், ஜூவஸ்தேவனின், காமக் களியாட்டத்துக்குத் தன்னால் முடிந்த அளவு, முட்டுக்கட்டை போட்டபடி இருப்பார்களாம். அம்மை இது செய்யாதிருந்தால், ஐயனின் லீலாவிநோதம் இன்னும் எவ்வளவு வளர்ந்திருக்குமோ— புராணிகனுக்கு இன்னும் எத்தனை 'புனிதப் புளுகுகள்' கிடைத்திருக்குமோ, யார் கண்டார்கள்.

கணவனின் நடவடிக்கைகளைச் சதா கண்காணித்து வந்த, ஹீராவுக்கு, ஒரு சமயத்தில், ஜூவஸ்

# பசுவாக மாறிய பாவை

ரு புதுப் பாத்திரத்தின்மீது, மாகம் கொண்டிருக்கிருர் என்ற கவல் கிடைத்தது; கோபம் மூண் து.

ஜூவசின் கருத்தைக் கவர்ந்த ந்தக் கட்டழகி, ஆற்றுத் தேவன் ஞகஸ் என்பானின், குமரி, அழகி, பயர், அயோ. அவளை அணுகினுர், வஸ். கடவுளின் காதலை அந்தக் ட்டழகி ஏற்றுக்கொண்டாள். இந் ச் 'சேதி'தான், எட்டிவிட்டது, ரீராவுக்கு; விட்டேனு பார், வளை!—என்று கூறியபடி, விண்ணி ருந்து கீழே தாவினுள் தேவி! தவன் இதை அறிந்தான்— காத யை, மனைவியின் கோபத்தி ருந்து காப்பாற்ற வேண்டி, கரு மகங்களை அவசர அவசரமாகப் டைத்து, வானத்தில் உலவவிட் ான்; அவைகள், திரைபோலாகி ட்டன; தேவி அவைகளை ஊடுரு க் கொண்டு வந்து சேருவதற்குள், ழகி அயோவை, ஒரு பசுங் கன் க, உருமாற்றி விட்டு, ஜூவஸ் தவன்,ஏதுமறியாதவர்போலிருந்து ந்தார். ஹீரா, கோபத்துடன், ந்திறங்கி, சொடியவளைக் காணு ல், பசு இருக்கக்கண்டு, பதியை ாக்கி, "இது என்ன?" என்று கட்க, பரமன், "ப்ரியே! பார் தனை! இப்போதுதான் இதனை ன் படைத்தேன்" என்று பசப்ப, தவி, இதிலேதோ சூதுஇருக்கிறது ன்று எண்ணி, "ஆம்! ஆருயிரே! ழகின் வடிவமான இப்பொருளை, ங்கள் அருந்திறமையால் பண்டக்கப் ட இதனை, அடியாளுக்குத் தர வண்டுகிறேன்" என்று கெஞ்ச ளுள். என்ன செய்வார் ஜூவஸ்! ி, என்ருர். இழுத்துச் சென்ருர் தவியார், இன்பவல்லியாக இருந்து றைவனுல் பசுவாக்கப்பட்ட, ஆற் த் தேவனின் அழகு மகளாம் யோவை.

பசுவாக உரு மாற்றப்பட்ட வையை, ஒரு ஆற்ருேரத்தில், யவிட்டு, பத்திரமாகப் பாது த்து வரும்படி, ஹீரா தேவியார், ர்கஸ் என்ற தன் ஏவலாளை, மர்த்தினுள்.

இந்த ஆர்கஸ், ஒரு அற்புதப் ர்வழி! நமது புராணிகன், இந்திர னுக்கு, ஏதோ ஓர் இக்கட்டின் காரணமாக, ஆயிரம் கண் ஏற்பட்டதாகக் கதை திரித்தான். கிரேக்கப் புராணிகன், இந்த, ஆர்கஸ், எனும் குட்டிக் கடவுளுக்கு, உடலெல்லாம் கண் உண்டு, என்று கயிறு திரித்து வைத்தான். எந்தச் சமயத்திலும், ஆர்கஸ், ஏதாவது இரண்டு கண்களைத்தான் மூடிக் கொள்வானும்—தூங்க! கண்கள்தான் எண்ணற்றன! எனவே. தூங்கினுலும், விழித்துக் கொண்டிருப்பது போலத்தான்! இரு கண் மூடிக் கிடக்கும்! மற்றக் கண்கள் திறந்து இருக்கும்; எனவே இந்தப் பலகண் தேவன், எதையும், பார்த்துக்கொண்டே இருப்பான்! அயோ, தப்ப முடியவில்லை — ஜூவஸ், நெருங்க முடியவில்லை! ஹீராவின் திட்டம் வெற்றி தந்தது! தேவன், வேதனையுற்ருன்! கடவுள்தான், எனினும் காதல். பாருங்கள்! இலேசானதா; அந்தச் சக்தி!

அருமை மகள் அயோவைஇழந்த இனகஸ், தவியாய்த்தவித்தான் — எங்கெங்கு தேடியும் அவள் கிடைக்காததால், ஏக்கமுற்ருன். அலைந்தான், மகளைத்தேடி! பசுவாகி,அவள் மேய்ந்துகொண்டிருந்த இடம் வந்தான் - மகளைக்காணுமே என்று பதைத்தபடி! பசுவைப் பார்த்தான் —பார்த்து? அவன்மகளை அல்லவா தேடுகிருன்! மகள்தான் அந்தப் பசு என்பதை அவன் கண்டானு! அயோவுக்குத் தெரிந்துவிட்டது, தன்தகப்பன் வந்திருப்பது. "அப்பா! இதோ நான் இருக்கிறேன்" என்று கூற முடியவில்லை —எனவே, கால் குளம்பினுல், தரையிலே, அயோ என்று கீறிக்காட்டிற்ரும் பசு!

என்ன அண்டப்புளுகய்யா இது —பசுவாக மாறிடுவதாம் — அதே போது வந்திருப்பது தகப்பன் என்று தெரிவதாம்—அவ்வளவு அற்புதசக்தி இருந்தும், பேசமட்டும் முடியாதாம்—ஆனுல் எழுதத்தெரிகிறதாம்! இதெல்லாம், என்னபுளுகு மூட்டை! இப்படிப்பட்ட புளுகுகளையா, புனிதனைப்பற்றி மக்கள் பூஜிப்பதற்காக என்று கூறிப்புனைவது!" என்று இன்று, நம்நாட்டவர் கூடக்கூறுவர் —நல்லறிவு அந்தஅளவுக்குப்பரவிட்டது. ஆனுல்,அன்று, இதுபோல கிரேக்கநாட்டிலே. எவனுவது பேசினுல், அவன்நாத்திகனுக் கப்படுவான்! அன்று, அங்கு! இன்று! இங்கு என்ன நிலை? இதுபோன்ற, அர்த்தமற்ற ஆபாசம் நிரம்பிய,கதைகள் கடவுட் கதைகளாக உள்ளன, பாராயணத்துக்கு உரியன! பக்தர்களுக்குப்பரவசம் தருவன! பகுத்தறிவாளன், அவற்றினைக் கண்டித்தால்,போதும் பாய்வர். அவன்மீது! பாபீ! நாத்திகா! என்று சீறுவர். முருகன், கடவுள் என்கிறீர்! அவர், வேங்கைமரமாக மாறினுர் என்கிறீர்! அதுவும், கள்ளத்தனமாகஒருபெண்ணைக்காதலிக்க, என்று கூறுகிறீர்— கடவுளுக்கு இந்தவேலை தேவையா?

"காயாதகானகத்தில் நின்றுலாவும் நற்காரியை" அடைய, முருகன், இவ்வளவு செய்யத்தான்வேண்டுமா? வள்ளியோ, மானிடமகள்!முருகனே கடவுள்! எம்மாத்திரம், அவர் மனதுவைத்தால்! நாரதர்போதாதா, தூதுபோக! நம்பிராஜன், மறுத்தா விடுவான்! வேடனுவானேன், வேங்கையாவானேன், கிழவனுவானேன், வேழத்தை அழைப்பானேன், இதெல்லாம், யார் நம்புவது!—என்று கூறிப்பாருங்கள், திருப்புகழ் படிக்குமவர் சீற்றமதனுலே, "சிறுமதியாளனே! பெருநெறி அறியாய்! சிவனுரின் மகனின் சேதியும் தெரியாய்! உருத்தெரியாமல் ஒழிப்பான் உனையே!" என்றெல்லாம் ஏசுவர். இன்றும், இது போன்ற நிலை இங்கு.

பாவை பசுவானது, குளம்பினுல் பெயர் தீட்டிக் காட்டியது போன்ற, புராணங்களை, இன்று, கிரேக்க நாட்டிலும், அறிவுபரவியுள்ள எந்த நாட்டிலும், பித்தர் பட்டியில் உள்ளோரும் நம்பார்! ஒரு காலத்து ஆத்திகம், இன்று, அறிவுச்சூன்யம், என்று அங்கு ஆக்கப்பட்டுவிட்டது.

மகளே இந்தப் பசு என்று கண்டு ஆற்றுத் தேவன், மனப்பதறினுன்! இக்காட்சியைக் கண்டான், பலகண் தேவன், ஆர்கஸ். விரட்டியடித்தான், விம்மும் தந்தையை. மற்ருேர் வெற்றி, ஹீரா தேவியாருக்கு; மன வேதனை, ஜூவஸ் தேவனுக்கு.

இந்தப் பல கண்ணை ஒழித்தால்தான், பசுவை மீண்டும் பாவை

# கரடியாக மாறிய கட்டழகி

யாக்கி மகிழமுடியும், என்ற தீர்மானத்துக்கு வந்தான் ஜுவெஸ், ஹெர்மீஸ் என்ற குட்டிக்கடவுளை, ஏவினன், எப்படியாவது, ஆர்கசை, அழித்து விட்டு வரச்சொல்லி, அவன், ஒரு அற்புதமான குழலெடுத்து ஊதினன்—கேட்போர் மயங்கும் விதமாக! நமது புராணிகன் கண்ணனின் குழலைப்பற்றிக் கதை கட்டினனல்லவா. அதுபோல் பசுவும் கன்றும், பாவையரும் பாம்பும், கண்ணனின் குழல்கேட்டு மயங்குவர், என்று துவக்கிய புராணிகன், பாரதப்பெரும் போரே, நேரிடாத படி, குழலை ஊதினன் கண்ணன், துரியன் சபையில், துரியன் பாண்டவர் மீதிருந்த பகை நீங்கப்பெற்று, தூயமனத்தினனாகி, அவரடி தொழுது, தர்மனைத்தழுவி, தூய துரியனனன் என்று முடிக்கவில்லையல்லவா! குழல், ஒரு அளவுக்குத்தான் பயன்பட்டது. அங்கும் அவ்விதம்தான்! எல்லோரையும் மயக்கிய அந்தக்குழல், பலகண்ணனை மயக்கவில்லையாம்! அவன் வழக்கம் போல், இருகண்மூடியாகவே இருக்கக்கண்டான், ஹெர்மிஸ். எனவே, வேறோர் தந்திரம் செய்தானும்! சுவையான கதை ஒன்று கூறினனும், அதைக் கேட்டுக்கொண்டே, ஆர்கஸ், தூங்கிவிட்டானும் — எல்லாக் கண்களையும் மூடிக்கொண்டு. இது தான் சமயமெனக்கண்ட ஹெர்மிஸ், அவனைக்கொன்று, அயோவைச் சிறைமீட்டானும்! எனினும், பசுவைப் பாவையாக்க முடியவில்லை, குட்டிக் கடவுளால். ஹீரா தேவியாருக்கு, விஷயம் தெரிந்தது—கோபம் மூண்டது, இறந்துபட்ட ஆர்கசின், பல கண்களை, எடுத்து, தன் பிரியத்துக்குரிய மயிலின் தோகைக்குக் கண்களாக அமைத்துவிட்டு—ஒரு, விஷவண்டைச் சிருஷ்டித்து அயோ மீது ஏவினள். அது கொட்ட, பசு, துடிதுடித்து, வலிதாங்கமாட்டாமல், கடலிலே வீழ்ந்து, நெடுந்தூரம் சென்று கடைசியாக, ஈஜிப்ட்சென்றதாம். ஜுவெஸ், தேவியுடன் போட்டியிட்டுப் பயனில்லை என்று கண்டு, கெஞ்சிட, தேவி, போனல்போகிறது என்று, பசுவை மீண்டும் பாவையாக்கினராம்—ஆனல் ஜுவெசின் காதலியாக்கவில்லை!

இங்ஙனம், ஹீராதேவியார், வீராங்கனையாய்விளங்கினர்! அதைக் கூறியே, பக்தர்கள், விசேஷப்பூஜைகள் நடத்திவந்தனர், ஹீராவுக்கு, நெடுங்காலம்!

ஜுவசின் மற்றோர் காதல் விளையாட்டையும், அம்மை, கருகச் செய்து, தன்வீரத்தைக் காட்டினராம்.

ஆர்கேடியாநாட்டிலே ஒருவள்ளி! —வேடர்குல மாது — அழகி — எனவே ஜுவஸ், காதல் வேட்டையில் ஈடுபட்டார்! கணவன்மீது — கோபக்கணைகளை ஏவினள், ஹீரா தேவி!

இந்த அழகியின் பெயர் காலிஸ்ட்டோ — ஹீரா, இவளை, பெண் கரடியாகும்படி சபித்துவிட்டார். காட்டிலே உலவிய கரடிக்கு, வேட்டைக்காரர்களைக் கண்டாலும் கிலி, மிருகங்களைக் கண்டாலும் மிரட்சி.

கரடியாகிவிட்ட இக்கட்டழகிக்கு ஆர்காஸ் என்றோர் மகன். அவன் அறியான், தாய், கரடியானதை! காட்டிலே வேட்டையாடும்போது, கரடி உருவிலிருந்த தாய்மீதே, ஈட்டியை வீசநேரிட்டது! ஆனல், ஜுவஸ், உடனே பிரத்யட்சமாகி, ஆபத்தைத் தடுத்து விளக்கம்கூறி, தாயும் தனயனும், விண்ணிலே, நட்சத்திரங்களாகக்கடவது என்று அருளினராம்.

இப்படி எல்லாம் கதைகள்! நட்சத்திரங்களுக்கு ஒருகதை! நம்நாட்டிலே இல்லையா, இன்னும், அருந்ததி நட்சத்திரமானகதை! பட்டப்பகலில் பார்க்கச் சொல்கிருரே, புரோகிதர், மணமக்களை, அருந்ததி நட்சத்திரத்தை!! அதுபோல், தேவனிடம் காதல் கொண்டதால், தேவியால் கரடியாக்கப்பட்டது, பிறகு தேவனல், நட்சத்திரமாக்கப்பட்டகாலிஸ்ட்டோ கதையைக் கிரேக்க புராணிகன் கட்டிவிட்டான். ஆனல் இன்று, கிரேக்கநாட்டிலே, இந்தக் கதையை நம்புபவர் கிடையாது, ஆனல் அருந்ததி கதையை இங்கு இன்றும், நம்பமறுப்பவனை நாத்திகன் என்று கூறுவர், நம்நாட்டுமத வாதிகள்.

ஹீராதேவியால் விரட்டப்பட்ட அயோ, மூழ்கிய கடலுக்குத்தான்,

அயோனியன் கடல் என்று
கடல் கிரேக்கநாட்டிலே இரு
தான் செய்கிறது. அதைக்
போர், இந்தக்கடலுக்குக்கூட
கதை கட்டிவிட்டார்களே எ
கேலி பேசுவர். இங்கோ, "இல
இருக்கிறதா இல்லையா? அது
பொய்யா?"என்றுகேட்பார்,மத
"ஆமாம், இருக்கிற இலங்கை
இல்லை என்று கூறுவேனு?" எ
சொல்வான், பகுத்தறிவா
"இலங்கை நிஜமாக இருக்கும்
அதை ஆண்ட இராவணன்,
நிஜமல்ல!" என்று கேட்பார்,
வாதி. "ஊர் உண்மைதான
அதனலே, அந்த ஊர்ப் பெ
வைத்துக்கொண்டு, எவனொரு
கட்டிவிடும் சரடுகளை எல்லாம்
முடியுமா?" என்று பகுத்த
ளன் பதிலளிப்பான். அந்தப்
நாத்திகம், என்று, நாட்டுப்
ரால் கூறப்படும்! அந்நிலை, நம
டில், இன்றும். அயோனியன்
இருக்கிற காரணத்தால், அ
இருந்திருக்க வேண்டும், ஜு
இருந்து தீரவேண்டும், எ
வாதாடும், மதவாதியும் கிடைய
மனமாசு நீங்கிப்போனகாரணத்
கிரேக்க நாட்டில்.

எல்லாம் அறிந்தவர் போ
பேசுவர், நம்நாட்டில், அணி
காட்டுவர்; அதன் முதுகி
மூன்று கோடுகள் உள்ளன ப
தீரா, என்று கேட்பர்; ஸ்ரீராம
திரர் அணைகட்டினரே கடலு
அப்போது அவருக்கு உதவி செ
அணிலை, அன்புடன் ஐயன்
கைத் தடவிக் கொடுத்தார்—அ
விரல் அடையாளம் பிறகு அ
பரம்பரைக்கே பொன்னிறக் கோ
ளாயின, என்பார், பூரிப்பு
இது நம்பப்படவேண்டிய, ஆத்
என்பது, பாமரரின் எண்ணம் இ
மயிலின் தோகையிலே உ
அழகிய வட்டங்களுக்கு, கண்,
பர்; கிரேக்கப் புராணிகன் கூறி
படி, இவை, ஆர்கசின் கண்
மயில் இருக்க அதன் தோகை
கண் இருக்க, எப்படி ஹீரா
யையும் நம்பாமலிக்க முடியு
என்று கூறி, தேவி பூஜை செய்
தெளிவற்ற மக்கள், ஹோமர்

(15-ம் பக்கம் பார்க்க)

# எதுவேண்டும்?

# பிடிவாதமா—தேவையா?

"புதிய அரசியலமைப்பு அமுலுக்கு வரும் காலத்திலிருந்து 15 ஆண்டுகளுக்கு இந்திய யூனியனின் அரசாங்க அலுவல் மொழியாக இப்போது போலத் தொடர்ந்து ஆங்கிலமே இருந்துவரும்"

ந்திய அரசியலமைப்பு நகல் மிட்டி இவ்வண்ணம் முடிவு ய்துள்ளது. இன்னும்தொடர்ந்து தினைந்து ஆண்டுகளுக்கு ஆங்கித்திலேயே, சகல விவகாரங்களும் த்தப்பட வேண்டும்; அதற்கிடைல் எந்தவித மாற்றமும் செய்யக்டாது; அதனுல் பயனுக்குப் பதில் தகமே விளையும் என்று கருத்து ருக்கும்படி.

மலையைக் கல்லி எலி பிடிக்கும் ரத்தனமாக இருக்கிறதே, இந்தச் ய்கை, என்று கருதுவர், இந்த ழிதான் நன்மை பயக்கும் என்று நாளாகக் கருதி, கூறிவந்த கள்.

ஆங்கில ஆதிபத்தியம்போனதும், அவர்கள் மொழிக்கு மட்டும் இங்கு டமேன்?" என்று கர்ஜனைகள் ழுப்பிய தேசிய "கனம்"கள் ருண்டு, நாட்டில்.

'ஆங்கிலமா, கூடாது! கூட வே டாது!!'

"வெள்ளையன் போனபின்னும் வன் மொழிக்கு ஆதிக்கமா?"—ன்றெல்லாம், ஆங்கிலம் ஒரு ணக்கூடாத பொருள் போலவும், ண்டினுல் தீட்டு என்பது போல ம் கருதினர்—பேசினர்.

ஆங்கிலேயர் மேலிருந்த ஆத்திரம், வர்கள் ஆதிபத்தியம் மறைந்த ன், அவர்கள் மொழியின் மீது ய்ந்து விட்டதோ, இவர்களுக்கு; தனுல் தான் படபடக்கின்றனர் ாலும்! என்று பலர், நினைத்த ண்டு. அவ்வளவு ஆத்திரமும் வேசமும் காட்டினர் தேசியத் லவர்கள்!

"ஆங்கிலத்தில் பேசமாட்டேன்—முடியாது. இந்தியில்தான் பேசுவேன்" என்று இங்கு வந்த பண்டித நேருமுதல் ஜெயப்பிரகாஷ்உள்படப் பல வடநாட்டுத் தலைவர்கள் பொதுக் கூட்டங்களில் கூறினர், இம்மாகாண மக்கள் இந்தி அறியார், பேசினுல் புரிந்து கொள்ளார், என்பது தெரிந்திருந்தும். ஆங்கிலத்தை விரட்டி இந்தியை நிலைநாட்டுவதில் அவ்வளவு ஆர்வம் தங்களுக்கிருப்பதாகக் காட்டி, மக்களை இந்தியின் பக்கம் திரளும்படி அழைக்கும் செயலாகக் கருதினர்!

பொதுக்கூட்டங்களில் மட்டுமல்ல சட்டசபைகளில் கூட இப்படிக் கூறப்பட்டது. அரசியலமைப்புச் சபையிலேயே "இந்தியில்தான் பேசுவேன்!" என்று வெளியிட்டு 'தேசிய பாஷை'யான இந்திமீது தங்களுக்கு இருக்கும் 'அபிலாஷை'யைக் காட்டிக்கொண்ட 'வீரர்கள்' பலருண்டு!

"ஆங்கிலம் உலகமொழியாயிற்றே! அதன் இலக்கிய மணம், அகில உலகும் வீசுகிறதே! அதன் எளிமையும் இலகுவும் இந்திக்கு வருமா? இந்தி அரசாங்க மொழியாக இயலுமா? ஏனிந்த வாதம், வீண் பிடிவாதம்!" என்று நம்போன்றோர் எடுத்துக் காட்டிய பொழுது, விதண்டா வாதிகள், வீண் பேச்சுக்காரர்கள் என்று தூற்றத் துணிந்தார்களே தவிர, சொல்வதில் அர்த்தமிருக்கிறதா என்று தங்கள் சுய சிந்தனைக்கு வேலைதரக் கூட விரும்பியதில்லை — இங்குள்ள 'கனம்'கள்.

இந்தியும் இங்கிலீஷும் மலையும் மடுவும் போல் என்று உபமானத்துடன் எடுத்துக்காட்டியும் கூட அவர்கள் எண்ணத்தில் "இந்தியையா குறை கூறுவது?" என்ற வீரம் எழும்பியதே, தவிர விவேகம் பிறந்ததில்லை!

ஆங்கிலம்—அந்நிய மொழிதான். இல்லையென்று எவரும் கூறார். ஆனுல் அந்த அந்நியமொழி இந்த இருநூறு ஆண்டுகளில் நாட்டு நிலையை எவ்வளவோ மாற்றியுள்ளது. வாழ்க்கையில் கலக்கும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது. விஞ்ஞான வளர்ச்சியுடன் கூடவே வளர்ந்திருக்கிறது. அதன் வளமும், வன்மையும் புறக்கணிக்க முடியாதது.

ஆங்கிலம் தெரிந்தால், உலகில் எங்கு வேண்டுமானுலும் தயக்கமின்றி நாம் சுற்றிவர முடியும். சட்டம், விஞ்ஞானம், கல்வி முதலிய எல்லாத் துறைகளிலும் அது பெற்று இருக்கும் இடம் வேறு எந்த மொழியாலும் எட்டிப்பிடிக்க முடியாததாகும்!

உலகம் கூடவேண்டாம்—இன்று இந்தியாவை எடுத்துக்கொண்டால் கூட ஆங்கிலம் தெரிந்திருந்தால் போதும், எந்த இடத்திற்கும் சென்று, எது வேண்டுமானுலும் கேட்டுக்கொண்டு திரும்பமுடியும். ஆனுல் இந்தி அப்படியல்ல! இந்தி கற்ற ஒருவரால் இந்தியாவிலுள்ள எல்லா மாகாணங்களுக்கும் சென்று வேண்டுவன அறிந்து, திரும்பமுடியும் என்பது இயலாது. காரணம், நாட்டின் கிழக்கிலிருந்து மேற்குவரை, வடக்கிலிருந்து தெற்குவரை எல்லாத்துறைகளிலும் ஆங்கிலம் தெரிந்திருப்பதுபோல், இந்தி தெரியாது—இதை எவரும் மறுக்க முடியாது.

இருந்தும் "அவர்கள்" அதையே பொது மொழியாக ஆக்கவேண்டும் என்றே கருதிவருகின்றனர். கருதுவது மட்டுமல்ல, உடனடியாக இந்தியே அரசாங்க மொழியாக ஆக்கப்பட்டு, அம்மொழியிலேயே எல்லா அலுவல்களும் நடைபெறவேண்டும்—நடைபெறப் போகிறது என்றும் ஆர்ப்பரித்தனர்.

அவர்கள் முதல் நோக்கம் முறியடிக்கப்பட்டிருக்கிறது, மூலபலம் முறிந்து விட்டது என்பது அரசிய

லமைப்பு நகல் கமிட்டியின் முடிவைப் பார்த்தால் நன்கு விளங்கும்.

புதிய அரசியல்படி 15-ஆண்டுகளுக்கு ஆங்கிலமே எல்லா அரசாங்கக் காரியங்களுக்கும் இருக்க வேண்டும்.

மாகாண, மத்திய சர்க்கார் தொடர்புகளும் ஆங்கிலத்திலேயே, அதுவரை, நடக்க வேண்டும்.

சட்ட நடவடிக்கைகள் யாவும் நடத்தப்பட வேண்டியதும் ஆங்கிலத்தில்தான்.

சுப்ரீம்கோர்ட், ஐகோர்ட் ஆகியவைகளின் நடவடிக்கைகளும்,

பார்லிமெண்டு, மாகாண சட்ட சபைகள் ஆகியவைகளில்கொண்டு வரப்படும் மசோதாக்கள், திருத்தங்கள், தீர்மானங்கள், ஆகியவைகளின் அதிகார பூர்வமான வாசகங்களும்,

மத்திய, மாகாண சர்க்கார்களின் அவசரச் சட்டங்கள், அரசியலமைப்பின் கீழ்ப் பிறப்பிக்கப்படும் எல்லாவித உத்தரவுகள் ஒழுங்கு விதிகளும்,

ஆங்கிலத்தில்தான் இருக்கவேண்டும் என்பதே அரசிலமைப்பு நகல் கமிட்டி கூறியிருக்கும் முடிவு.

இந்தியிலேயே புது அரசியலமைப்பு இருக்கவேண்டும், அதன் நடவடிக்கைகளும் இருக்கவேண்டும் என்று அவசரமும் ஆர்வமும் துடிக்க 'அவர்கள்' குதித்தனர்.

ஆனால், அவர்களுக்குக் கட்டுப்பட்ட அரசியலமைப்பு சபை நகல் கமிட்டி கூறியிருக்கிறது, இன்னும் பதினைந்து ஆண்டுகளுக்கு ஆங்கிலத்திலேயே எல்லாக் காரியங்களும் செய்யப்படவேண்டும் என்று.

பதினைந்து ஆண்டுகள் முடிந்ததும், அதற்குப்பின் ஆங்கிலத்தை நீக்கி, அரசியல் மொழியாக இந்தியை ஆக்கலாம் என்ற உறுதிகூட அவர்கள் முடிவில் தென்படவில்லை!

ஆங்கிலம் இருக்கும் என்று ஒரு கால வரையறை காட்டப்பட்டிருக்கிறதே தவிர, அதற்கப்புறம் இந்தியை அரசாங்க மொழியாக ஆக்கிவிட முடியும், என்ற உறுதிகூட ஏற்படவில்லை 'அவர்களுக்கு' — இந்த இடைக்காலத்தில் எங்கும் இந்தியைப் பரப்பி, வளர்த்து, எல்லாவற்றிற்கும் உகந்ததாக ஆக்கவேண்டிய தற்கான முயற்சிகள் செய்யப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தும்!

15-ஆண்டுகள் முடிந்தபின்னும் 'திட்ட'மான காரியங்களுக்கு ஆங்கிலம் உபயோகிக்கப்படலாம் என்பதற்கான அதிகாரமும் பார்லிமெண்டுக்கு இருக்கும் என்பது அரசியலமைப்பு நகல் கமிட்டியின் முடிவில் கூறப்பட்டிருப்பதாகும்! இது, இந்தியைப் பற்றி அவர்களிடமே இருக்கும் "நம்பிக்கையின்" அளவைக் காட்டுகிறது!

அரசியலமைப்பு நகல் கமிட்டியின் தீர்ப்பிலிருந்து விளங்கும் உண்மை, இந்தி, இன்றைய நிலையில், அரசாங்க மொழியாக ஆக—ஆக்கப்பட அருகதையுடையது அல்ல; அந்த நிலையில் அது இல்லை; எல்லாக் காரியங்களுக்கும் ஏற்றதாக இல்லை, என்பதுதான். அதாவது, நாம் இதுவரை கூறிவந்தமுடிவுதான்!

* * *

"இந்திதான் அரசாங்கமொழியாக இருக்கவேண்டும்" என்ற முரட்டுப் பிடிவாதம் காங்கிரஸ் மேலிடத் தலைவர்களிடம் தளர்ந்திருக்கிறது என்பது இந்த முடிவிலிருந்து, விளங்குகிறது.

இப்போது, அவர்களின் திசை மாறியிருக்கிறது. இன்னும் பதினைந்து ஆண்டுகளில் இந்தியை அத்தகையதாக ஆக்கவேண்டும் என்றே முடிவு செய்துள்ளனர்!

கவனியுங்கள்! இன்னும்பதினைந்து ஆண்டுகள் காலத் தவணையில், இந்தி அத்தகையதாக ஆகிவிடும் என்பதல்ல அவர்கள் முடிவு. ஆக்கிவிட வேண்டும் என்ற ஆசைதான்!

ஆவது—ஆக்கிவிட வேண்டியது என்ற இரண்டு வார்த்தைகளுக்கு இடையிலும் இருக்கும் வித்தியாசத்தை நாம் கவனிக்க வேண்டும். எப்படியாவது இந்த இடைக்காலத்தில், இந்தியை, அரசாங்க மொழியாக ஆக்குவதற்கான முயற்சிகளைச் செய்யவேண்டும் என்பதே அவர்கள் கூற்றாகும்.

அதாவது, இந்தி எல்லா மாகாணங்களும் புரிந்து கொள்ளும்[...] யானதாக இப்போது இல்லை[...] எனவே அப்படிச் செய்யவேண்[...]

இந்தி பேசப்படும் இடங்க[...] கூடச் சட்ட நுணுக்கம் வா[...] சொற்களோ, விஞ்ஞானச் செ[...] களோ, சரியான அளவில் இல்லை[...] எனவே அப்படியுள்ளதாக ஆ[...] வேண்டும்!

எனவே, இந்தியின் இன்[...] நிலை பொதுமொழி ஆவதற்[...] போதியதாக இல்லை என்பதா[...] இந்த இழிநிலையிலிருந்து இந்தி[...] மீட்டு, புது வார்த்தைகளைக் கண்[...] பிடித்து, உருவானதாக இ[...] மொழியை 'ஆக்குவதற்காக[...] இந்த இடைக்காலத் திட்டத்[...] முடிவு செய்துள்ளனர்.

பாராட்ட வேண்டியதுதான், இ[...] போதாவது, உண்மை நிலை[...] உணர்ந்துகொண்டு விட்டார்[...] என்பதால். ஆனால் அதே வே[...] யில், இவர்களின் இத்தகைய மு[...] சியால் எதிர்பார்க்கும் நன்மை ந[...] கென்ன ஏற்படப்போகிறது—அ[...] களுக்குத்தான் என்ன ஏற்பட்டு[...] முடியும் என்பதையும் நாம் சிறி[...] சிந்திக்க வேண்டும்.

சொற்களைத் தேடிக் கண்[...] பிடித்து, மறு மலர்ச்சி வழிய[...] இந்தியைக் கொண்டுவரமுயற்சிக்[...] போகும் இந்த 15 ஆண்டுகளி[...] உலக வளர்ச்சி இன்றுள்ளதுபோ[...] அப்படியே, இவர்களுக்காக, நின்[...] விடவா போகிறது! வளரும் உ[...] கில் மணிக்கொரு விஞ்ஞான மு[...] கள் வெளிக் கிளம்புகின்றன! அ[...] மட்டுமல்ல, இந்த இடைக்காலத்தி[...] ஆங்கிலத்தின்வளர்ச்சியும்,இந்தி[...] ரும் விகிதத்தைவிடப் பன்மடங்[...] அதிகமாகவே செய்யும். எனவே[...] இன்று உலக மொழியாக இருக்கு[...] ஆங்கிலத்துக்குப் பதில் இந்தி[...] நாட்டுப் பொதுமொழியாக ஆ[...] நாடாளவந்த 'நாயகர்கள்' எடுத்[...] கொள்ளும் முயற்சி விழலு[...] கிறைத்த நீராகி, ஏமாற்றமும், இ[...] நிலையும் பரிசாகக் கிடைத்தாலு[...] எதிர்காலத்தில் நாம் ஆச்சரியப்ப[...] வதற்கில்லை.

* * *

நாம் இந்தியை எதிர்க்கிறோம்[...] நம் கலாச்சாரத்தின்மீது, மொ[...]

மீது எடுக்கப்படும் மறைமுக
யெடுப்பு, கட்டாயமாக அதைத்
ிப்பதால் கஷ்டம் வளர வழி
டுமேயன்றி, எந்தவித நன்மை
பிறக்க வழியில்லை — ஏற்பட
யாது என்பதால்! தமிழ் மகன்
ட்டில் உலவத்தமிழும், இந்தி
ல் பழக இந்தியும், உலகில்
வுகொள்ள ஆங்கிலமும் அல்
, இனிக், கற்கவேண்டிய அவ
ஏற்படும். தன் மொழியான
மை, அறிந்துகொண்டு, உலக
ழி ஆங்கிலத்தையும் கற்றுக்
ண்டால் இந்தியா மட்டுமல்ல
கம்முழுதுமேதொடர்புஏற்படுத்
கொள்ள முடியுமே! இந்திக்குச்
வழிக்கும் காலம்கூட ஆங்கிலத்
து வேண்டாமே! அவ்வளவு
துவான மொழியாயிற்றே! அப்
ிருந்தும் ஆங்கிலம் கூடாது,
ிதான் இருக்கவேண்டும் என்று
ாட்டினர் கூறிக் கட்டாயப்
திஞல், அதை என்னவென்று
ல்ல முடியும், தங்கள் ஆதிக்க
ர்ச்சிக்கான வழிகளில் இதுவும்
திட்டம் என்று கூறுவதைத்
!—என்பதாக கூறி இந்தி
ண்டாம் என்று நாம் கூறி வரு
ம். ஆனுல்! நாட்டின் அரசாங்க
ழியாக—பொது மொழியாக—
வண்டும் என்பதற்காகவே
எங்கும் கட்டாய பாடமாக்கப்
வருகிறது—ஆட்சியாளரால்.

ட்சியாளரின் இந்நடவடிக்கையால்
டும் விளைவுகள், விபரீதமான
ளாக, விஷ விருட்சத்துக்கு
ிடுவதாகவே இருக்கின்றன.
கச் சமீபத்தில் இந்திய கல்வி
ரி ஆஸாத் புதுடெல்லியில்
டிய மாநாட்டின் முடிவுகள்
ிவாக்கும். அந்த முடிவுப்படி
மாணவன், தன்னுடைய தாய்
ழி, வட்டார மொழி, தேசிய
ழி, ஆங்கிலம் ஆகிய நான்கு
ழிகளையும் கற்கவேண்டியவனு
ன்!

ளம் வயதிலேயே எதிர்
விருட்சமாகிய அவன் வாழ்வு
டுக்குள் கொண்டு போகப்படு
, கட்டாயம் என்கிற கயிற்றின்
ம் கட்டப்பட்டு. சென்னையி
ள ஒரு பள்ளியில் தெலுங்கு
வன் ஒருவன் படிக்கிறுன்
ல், அவன் தாய்மொழியான
லுங்கு கற்கவேண்டும். வட்டார
ழியான தமிழைக் கற்கவேண்டும். தேசிய மொழியான இந்தியை கற்கவேண்டும். நான்காவதாக ஆங்கிலத்தையும் கற்கவேண்டும்!

இதேபோல அமிருதசரசில்உள்ள ஒருவங்காளிச் சிறுவனை எடுத்துக் கொண்டால் அவன் வங்கம், வட்டாரமொழியான பஞ்சாபி, தேசிய மொழி இந்தி, அடுத்தபடி ஆங்கிலம் கற்கவேண்டும்!

அதேபோல ஆமதாபாத்தில்வசிக்கும் ஒரு மராட்டியச் சிறுவன் மராத்தி, குஜராத்தி, இந்தி, ஆங்கிலம் கற்கவேண்டும்!

எத்துணை விசித்திரமயமான ஏற்பாடு! துள்ளித்திரிகின்ற இளம் வயதில், கவலை தெரியமுடியாத குழந்தைப்பருவத்தில், எதிர்கால உலகமான இளங்குழந்தைகளுக்கு இத்துணைப்பொதிமூட்டைகள், ஒன்றின்பின் ஒன்றுக! இந்தியை "தேசிய பாஷையாக" ஆக்கவேண்டும் என்கிற 'அவர்கள்' ஆசைக்கு இவர்கள் வாழ்வு வேதனைமயமாக ஆகவேண்டும்போலும்!

சங்கடங்களைத் தாண்டி எப்படியோ இவர்கள் படித்து வருகிறுர்கள் என்றே வைத்துக்கொள்வோம். இந்தக்குறுகிய காலத்தில், நாட்டின் எதிர்காலப்பொதுமொழியாகஆக்கப் படப்போவதாகக் கூறப்படும் இந்திமொழியில் எத்தகைய தகுதியும் திறமையும் பெற்றவர்களாக இருப்பார்கள் இவர்கள்!

தமிழ்மகன் தன்வாயில் நுழையாத, இந்தியை, தத்தித்தாவி,எழுத்துக்கூட்டமுறப்படும்வேளையில், இந்தியைத் தாய்மொழியாகக்கொண்ட, ஐக்கியமாகாணத்தில் வசிக்கும் ஒரு சிறுவன், தாய்மொழி இந்தி என்பதால், அவன். தமிழ்மகனைவிட, எவ்வளவு தகுதியும் திறமையும்,அதிகம் உடையவனுன்? இந்திமொழி அரசாங்க மொழியாக ஆக்கப்பட்டால், அதில் புலமை பெற்ற "அவர்கள்" தானே பட்டமும், பதவியும்,பெற்று மகிழமுடியும்?

சென்னையில் படிக்கும் மலையாளச்சிறுவன் மலையாளம், தமிழ், இந்தி, அத்துடன் ஆங்கிலம் அத்தனையும் படித்துத்தீர வேண்டும். ஆனுல் லக்னேவிலிருக்கும் ஒரு சிறுவன் இந்தியும் — ஆங்கிலமுமே படித்தால்போதுமே, முன்னுக்குவர!

இந்த நிலைமைகள் கூர்ந்துகவனிக்கப்படவேண்டியன, நம்மால், நாம்தான் எந்தவிதத்திலும் இன்னலால் பாதிக்கப்படப் போகிறவர்கள் என்பதால்.

இவ்வளவு தொல்லைகள், துயரங்களைச்சமாளித்துப் படித்தும் கடைசியில் என்னபலன் ஏற்படமுடியும், நம்குழந்தைகளுக்கு, இந்திமொழியால்!

* * *

பொதுமொழி ஆகும் "யோக்கியதை" இல்லை இந்திக்கு, என்பது இப்போது இந்திய அரசியலமைப்பு நகல்கமிட்டி செய்துள்ள முடிவின்படி விளங்கிவிட்டது. எனவே, இந்தியை எல்லாமாகாணங்களிலும் பரவும்படிச்செய்ய, இந்த 15 ஆண்டுகளில் ஆவன செய்யவேண்டுமென்பதே ஆட்சியாளரின் திட்டம்.

இந்த எண்ணத்தின் அடிப்படையாலேயே கல்வி முறையும், பாடத்திட்டமும் வகுக்கப்பட்டிருக்கிறது. இந்த முறையால், இந்தி வளருமா, என்றுல் அதுவும் நிச்சயமாகக்கூற முடியாது. அப்படி எல்லா மாகாணங்களும், தாய்மொழி, வட்டார மொழி, தேசியமொழி, ஆங்கிலம், ஆகிய "இத்தனைகளையும்" படித்து வந்தாலும், இந்தியைத் தாய்மொழியாகக்கொண்ட வடநாட்டவரே,வாழ்வில் வளமும், அரசாங்கத்தில் உயர் பதவியும் அடையமுடியுமே தவிர, நம்மவரால்முடியாது. காரணம் இந்தி அரசாங்க மொழியாகிவிட்டால் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டோர்தான், நம்மவரைவிட அம்மொழியில் "முதன்மை ஸ்தானம்" பெற்று ஆட்சித்துறையிலும் முதல் இடம் பெறுவர்.

அதுமட்டுமல்ல, இந்தியைப்படித்தால்மட்டும் போதாது, நாம். ஆங்கிலமும் அறிந்திருக்கவேண்டும், உலகத்துடன் தொடர்பு பெற.

இவ்வளவு அல்லல் நமக்கு, இந்தியைப் பொதுமொழியாக்கவேண்டும் என்ற அவர்கள் ஆசைக்காக! ஏனே, இது?

இப்போது, அரசியலமைப்பு நகல் கமிட்டியின் முடிவு இந்தி அரசாங்க மொழியாக அருகதையற்றது என்பதை விளக்கியிருக்கிறது. இருந்தும் 15 ஆண்டுகளில் அத்தகையதாக ஆக்கத் திட்டம் தீட்டுகின்றனர். இத்திட்டத்தால் நமக்கு நன்மை

(9-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

ஞாயிறு] 28—8—49 [காஞ்சி

## வீம்பல்ல விவேகம் வேண்டும்

✲

வாழ்வு வளமாகவில்லை—வளம் ஏற்படும் வகையும் தென்படவில்லை!

மக்கள் மன்றத்திலே எதிரொலிக்கும் இதயக் குமுறல் இது. உள்ளத்திலே வேதனை, உடலிலே துடிதுடிப்பு, நாட்டு மக்களிடையே இன்று ஏற்பட்டிருக்கிறது, ஆளவந்தார் மீது ஏற்பட்ட அதிருப்தி காரணமாக. சுயராஜ்யம் வந்ததும் 'சொர்க்க சுகம்' அனுபவிக்கலாம் என்று ஆசைகளைப் பரப்பி வந்தனர் இன்று ஆளவந்தார்களாக இருப்பவர்கள், அன்று, மக்களிடம். அத்துணையும் காட்டுக் கூச்சலாயிற்றே தவிர, இன்று காரியமாக்கப்படவில்லை. எதிர்பார்த்த இன்பங்கள் 'எள்முனை' கூட ஏற்படவில்லை மக்களுக்கு.

எனவே மக்கள் உள்ளத்திலே குமுறல், முகத்தில் துயரக்குறி இன்று எங்கும் காட்சியளிக்கிறது, பல நிகழ்ச்சிகளாக. வேதனையின் விளைவு தாங்கமுடியாமற் போகவே மக்களின் ஆத்திரம், எல்லையை மீறி எழும்பி வருகிறது. காங்கிரஸ் தலைவர் பெயரைக் கேட்டாலே கன்னத்தில் போட்டுக்கொள்ளும் அளவுக்கு மக்கள் மனதிலே 'பக்திமனோபாவம்' இருந்தது. இன்று, நிலைமைமாறிவிட்டது. தலைவர்கள், ஆட்சியிலிருப்பவர்கள் ஆகியோரின் பெயரைக்கேட்டாலே அருவருப்படைகின்றனர், ஆத்திரமடைகின்றனர் — பொது மக்கள்.

காங்கிரஸ் தலைவர் வருகிறார் என்றால் முன்பெல்லாம், ஏதோ, 'காணக்கொடுத்துவைக்க வேண்டும்!' என்று கருதிக்கொண்டு ஓடிவந்த மக்கள் இருந்தனர்!

கண்டதும், கைகூப்பி, 'கடவுள்' எனத் தொழுமளவுக்கு, மக்களிடம் பக்தியும், பாசமும் ஏற்பட்டிருந்தது.

ஆனால், இன்று? ஏமாற்றம்தான் எங்கும் எதிரொலிக்கிறதே தவிர, முன்போல அன்பும், ஆதரவும் இல்லை காங்கிரஸ் தலைவர்கள் மீது—மக்களுக்கு அத்தகைய தலைகீழான நிலை ஏற்பட்டுள்ளது நாட்டில்.

சுயராஜ்யம் பற்றிப் பாடப்பட்ட தொகையராக்கள் பல உண்டு! அவை இன்று முகாரியாக மாறிவிட்டன. முகாரியை எதிர்பார்த்தவர்களல்ல மக்கள். எனவே வேதனையும், விம்மலும் அவர்கள் இதயங்களிலே, எழுந்து துடிக்கின்றன. இதன் விளைவாக, யார்மீது தங்கள் ஆசையையும் அன்பையும் அப்படியே 'கொட்டி' வைத்திருந்தார்களோ, அவர்கள் மீது இன்று ஆத்திரமும், ஆவேசமும் எழும்பச் செய்திருக்கிறது. இந்த நிலையைக் கண்டால், ஆளவந்தார்களில் பலருக்கு ஆத்திரம் உண்டாகிறது, மான உணர்ச்சி ஏற்படுவதற்குப் பதில்.

"மந்திரியாகிய நாம் போகிறோம். மக்கள் மலர்மாலை கொண்டுவருவர், ஒரு பக்கம் 'ஜே, ஜே!' என்று கோஷமிடுவர். ஊர்வலம் இருக்கும்!" என்றெல்லாம் எண்ணிக்கொண்டு கிளம்பும் 'கனம்'கள், போகுமிடங்களிலெல்லாம் பொங்கும் உணர்ச்சி வெள்ளத்தைத் தான் காண்கிறார்கள்! மக்களின் அதிருப்தி அனலாக வீசுவதைத் தான் காண்கிறார்கள்!

இந்த—எதிர்பாராத மாறுதல்—அவர்கள் உள்ளத்தைப் புண்படுத்தத்தான் செய்யும், அவர்களும் மனித உணர்ச்சி உள்ளவர்கள் தான் என்பதால்!

ஆனால், மக்களின் மாபெரும் மன அதிருப்தியைக் காணும் மந்திரிமார்களுக்கு உண்மையில் ஏற்படவேண்டியது, 'மான உணர்ச்சி'தான். ஆனால் நமது 'கனம்'களுக்கோ 'நாம் வந்தும் இவர்கள் மதிக்காமலிருப்பதா? நாம் யார்? இவர்கள் யார்?' என்கிற பொய்ப் பெருமை, முன்னிற்கிறதேயொழிய, 'இவர்களால் என்ன முடியும்!' என்ற வீம்புஉணர்ச்சி எழும்புகிறதே தவிர, விவேக உணர்ச்சி ஏற்படுவதாகத் தெரியவில்லை.

கடந்த சில தினங்களுக்கு முன் பிரதமர் பண்டிதநேரு கல்கத்தா சென்றிருந்தார். அப்போது, மக்கள் அவரை, அவர் எதிர்பார்த்ததுபோல வரவேற்கவில்லை. மாறாக, வேத[...] கொண்ட உருவங்களாகக் காட்[...] யளித்தனர்—சாதாரணமாக அல்[...] —'பிரதமரே திரும்பிப் போ[...]' என்பது போன்ற எதிர்ப்பு ஆர்[...] பாட்டங்களுடன்!

மக்களின் மனவெறுப்பை, ம[...] றத்தைக் கண்டதும், பண்டிதநே[...] உண்மையில் பதறியிருக்க வே[ண்]டும். 'நாட்டுக்கு நன்மை செய்[...] எனக்கா இப்படிப்பட்ட வரவேற்[...]' என்று! அல்லது 'ஏன் இப்படி[...]' என்பதையாவது எண்ணியிரு[க்க] வேண்டும்!

இந்த இரண்டும் அவர் உள்ள[த்]திலே, எதிரொலிக்கவில்லை, இ[...] நிகழ்ச்சிகளின் விளைவாக. அ[...] எதுவும் அவர் இதயத்தைத் தா[க்க]வில்லை, அதற்குப் பதில் ஆத்திர[ம்]தான் எழும்பியிருக்கிறது —

"தேர்ந்தெடுக்கப்பட்ட பிர[த] மந்திரியான ஒருவரை எதிர்த்[து] ஆர்ப்பாட்டம் செய்வதா? இ[...] எப்படிப் பொறுக்கமுடியும்? சு[தந்]திர நாட்டில் இதை எப்படி அ[னு]மதிக்க முடியும்?"

என்று ஆவேசம் ததும்பக் கே[...]டுள்ளார்.

மக்கள் மன அதிருப்தியைக் கா[...]டிக் கொண்டனர், தங்கள் ஆர்[ப்]பாட்ட மூலம். இந்த ஆர்ப்பாட்[...] அவரைத் தலை குனியச் செய்திரு[க்க] வேண்டும். 'தவறு ஏற்பட்டிரு[க்க]லாம். அவைகளைக் களைந்து ஆவ[...] செய்ய முயற்சிக்கிறேன்' என்று ஒ[...] ஆறுதல் மொழியாவது, வாயளவி[ல்] கூறியிருக்கலாம். அவர், அப்படி[க்] கூறவில்லை. ஆத்திரம் ததும்[ப] கேட்கிறார் 'பிரதமராகிய என்[னை] எதிர்த்து எப்படி ஆர்ப்பாட்[டம்] செய்யலாம்' என்று!

விவர மறியாதவர் என்று கூ[ற] விட முடியாது நேருவை. அ[...] பண்டிதர். இருந்தும் எக்காள[மி]கிறார் "எனக்கா—இந்நாட்டுப் பி[ர]தமருக்கா" என்று!

ஒருபோது, தன்னைக் கண்டது[ம்] மகிழ்ச்சி மலர 'ஜே!' போட்ட மக்[கள்] இன்று ஏன் 'திரும்பிப் போ' என்[று] முழக்கமிடுகிறார்கள்? இதற்கென்[ன] காரணம், என்பதைச் சிந்திப்ப[தற்]குப் பதில் சீற்றமே அவரு[க்கு] எழும்பி யிருக்கிறது.

'மக்கள் தங்கள் மனக்குறைகளின் விளைவாகத் தானே, எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். அவர்கள் மனக்குறை வளரும்படியா, நமது ஆட்சி நடந்து வந்திருக்கிறது' என்று உணரவேண்டியதற்குப் பதில், 'நம்மையா எதிர்ப்பது?' என்ற உணர்ச்சி வேகமே உருவாகியிருக்கிறது.

இந்த உணர்ச்சியின் விளைவு வேதனையாகத்தான் நேருமே ஒழிய, ஆட்சிப் பீடத்தின் மகத்துவத்தைக் காப்பாற்றி விடாது.

கல்கத்தாவில் மட்டுமல்ல. நம் மாகாணத்தில்கூட சமீபத்தில் பிரதமர் குமாரசாமி இராசா சுற்றுப் பயணம் செய்த பொழுது, குடந்தையில் இரு கல்லூரி மாணவர்கள், கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் செய்த குற்றம், ஆட்சேபகரமானவைகளை, சுவரில் ஒட்ட இருந்தார்கள்,—அதுவும் பிரதமர் 'விஜயம்' செய்யும்பொழுது, அப்படிச் செய்ய இருந்தார்கள் என்பதாம்!

மக்களின் மனக்குறைகளை, ஆளவந்தாரிடம் கூறாமல், தெரிவிக்காமல் வேறு யாரிடம்தான் போய்ச் சொல்வதோ, தெரியவில்லை?

மனக்குறையைத் தெரிவிக்கும் மக்கள் மீது பாய்வதால், நிலைமை, இன்னும் கெடுமே தவிர, சீர்திருந்தாது — இதை ஆளவந்தார்கள் உணரவேண்டும். மக்கள் மத்தியிலே இழந்த நன்மதிப்பைப் பெறவேண்டியதற்கு, அவர்களுக்குள்ள ஒரே வழி மக்கள் குறையைப் போக்குவதுதான்; மகிழ்ச்சி எங்கும் ஏற்படும்படி செய்வதுதான். அதைவிட்டு, ஆட்சி கையிலிருக்கிறது என்பதால், அவர்கள் மீது ஆத்திரம் கொள்வது, நெருப்பில் எண்ணெய் விடுவதே போலாகும்.

—✻—

## பிடிவாதமா?

7-ம் பக்கத்தொடர்ச்சி

விளையுமா என்று பார்த்தால், தொல்லைகள் அதிகமாகின்றனவே தவிர, துயர் தீரும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

இத்தகைய ஏற்பாட்டால் நமக்கு எந்தவித நன்மையும் ஏற்படப்போவதில்லை; இன்னல்களே வளரப் போகின்றன. ஏனிந்த முறை! இது வேண்டுமா? மத்திய சர்க்கார் கூறுகிறது என்பதற்காக, இம்முறையை ஏற்றுக்கொண்டு எதிர்கால உலகை நாம் காட்டிக்கொடுக்க வேண்டுமா?

அருகதையில்லாத இந்தியை ஆட்சிக்கான மொழியாக்க 'நம்மவர்' நலனை நாம் பறிகொடுக்க வேண்டுமா?

* * *

இந்தி, இந்நாட்டின்பொதுமொழியாக வேண்டும் — ஆக்கப்படவேண்டும் என்ற கருத்துக்கு ஆதாவு தந்தவர்களில் முதலிடம் பெற்று விளங்கியவர் காந்தியடிகளே யாகும். அவர் தம்முடைய திட்டங்கள் பலவற்றோடு இந்திப் பொதுமொழித் திட்டத்தையும் ஒன்றாக்கிப் பேசிவந்தார். காந்தியடிகளின் திட்டங்கள் பலவற்றுள், சிலவே நடைமுறையில் வெற்றி அளிக்கக் கூடியன என்பதைக் காங்கிரஸ் காரர்களே உணரும் நிலைமைக்கு இன்று வந்துள்ளனர். காந்தியடிகளின் திட்டங்களில் முதலிடம் பெற்றுள்ள கதர்த் திட்டம் வெற்றிபெற முடியாதென்பதை ஆளவந்தார்களே உணரும் அளவுக்கு அந்தத் திட்டம் தோல்வி அடைந்து வருகிறது. தங்களைக் காங்கிரஸ்காரர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களாலேயே, கதரை ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு, உள்நாட்டு — வெளிநாட்டு ஆலைத் துணிகள் அவர்களை மயக்கிவிடுகின்றன. கதர், காங்கிரசின் திட்டங்களில் ஒன்றேயன்றி, அது—நடைமுறையில் வரக்கூடியதல்ல என்பதை அவர்களே செயல்முறையில் செய்து காட்டுகின்றனர்.

இது போலவேதான் காந்தியடிகளின் இந்தித்திட்டமும் வெற்றிதர முடியாதது. வேண்டுமானால் திட்டங்களில் ஒன்றாக, அதாவது, கதரைப் போலவே, இந்தியையும் வைத்துக் கொள்ளலாமே யொழிய, அதனை நடைமுறைக்குக் கொண்டு வந்து வெற்றிபெறச் செய்ய முடியாது. முடியாது என்று நாம் கூறும் இந்த முடிவே புதிய அரசியல் அமைப்புக் கமிட்டியின் நகல் தீர்மானத்திலும் பிரதிபலிக்கிறது. 15-ஆண்டுகளுக்குப் பின்னரும், இன்றியமையாத தேவைகளுக்கு ஆங்கிலம்தான் இருந்து தீரும் என்று அத்தீர்மானம் கூறுகிறது. எனினும், இந்தி, இந்நாட்டின் எல்லாத் தேவைகளையும் பூர்த்திசெய்யாது—செய்ய முடியாது என்பதை அவர்களே உணருகிறார்கள் — ஒப்புக்கொகிறார்கள். என்றாலும், இந்திதான் இந்நாட்டின் பொதுமொழி என்று வீராப்புப் பேசுகிறார்கள்! என்ன செய்வது? அவர்களின் நிலை அப்படிப்பட்ட தர்மசங்கடத்தில் கொண்டுவந்து விடப்பட்டிருக்கிறது.

காந்தியடிகள் சொன்ன வழி செல்லவேண்டுமென்ற ஆசை ஒரு புறமும், உலகப் போக்கிற்கு ஏற்ப நடக்க வேண்டுமென்ற ஆர்வம் இன்னொரு புறமும் நின்று அவர்களைத் திக்கு முக்காடச் செய்கிறது. அதாவது பக்திக்கும் பகுத்தறிவுக்கும் போர் நடைபெறுகிறது! இதில் எது வெற்றி பெறும்—எது வெற்றி பெற வேண்டும்? பக்தியா? பகுத்தறிவா? பக்தி பிடிவாதத்தைக் காட்டுகிறது. பகுத்தறிவு தேவையை உணர்த்துகிறது. நாட்டுக்கு எதனால் நன்மை ஏற்படும்? பிடிவாதத்தின்படி நிற்பதாலா? அல்லது தேவையை உணர்ந்து அதன்படி காரியங்களை நடத்திச் செல்வதாலா? கூறுங்கள்.

✻


## சந்தாதாரர்களுக்கு

"திராவிட நாடு" சந்தாதார்கள், சந்தா சம்பந்தமாகக் கடிதம் எழுதும்போது சந்தா எண்ணைக் குறித்தெழுத வேண்டும். சந்தா எண் குறிப்பிடாத கடிதங்கள் கவனிக்கப் படமாட்டா. சந்தா முடியும் தேதி ஒவ்வொரு முகவரிக்கு அடியிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்துச் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளவும்.

மானேஜர்.

## ஏஜண்டுத் தோழர்களுக்கு

"திராவிட நாடு" அதிகம் காப்பிகள் தேவைப்படுவோர், பிரதி வாரமும் புதன்கிழமைக்குள் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

மானேஜர்.

# விழா முடிந்துவிட்டது—ஆனால்.........!

இரண்டாவது ஆண்டு சுதந்திர நாள் விழா முடிந்துவிட்டது. செங்கோட்டையில் நேரு கொடியேற்றிய காட்சி, சென்னை ஐலண்டு மைதானத்தில் கவர்னர், பிரதமர் ஆகியோருக்கு ராணுவம் அணிவகுத்து மரியாதை தந்த பெருமை, பட்டேலின் அறிவுரை, பட்டாபியின் தெளிவுரை இவையெல்லாம் நடந்துவிட்டன. அந்நிய நாடுகளிலும் ஆங்காங்குள்ள இந்திய அரசியல் தூதுவர் காரியாலயங்கள் இந்நாளை எவ்வளவோ பெருமிதமாக, பெருஞ்செலவில், இந்தியாவின் புகழும் பூரிப்பும் ஓங்கும்படி கொண்டாடியிருக்கும்—இந்த "சிறப்பும்" விழாவும் இயற்கை. அந்நிய ஏகாதிபத்தியம் விரட்டப்பட்ட ஒரு நாள், விழாவாகக் கொண்டாடப்படுவதில் ஆச்சரியமில்லை. அதுவும் அந்தச் செயலைச் சாதித்ததாகப் பெருமைப்படும் கட்சியினர் ஆட்சிப் பீடத்திலிருக்கும் பொழுது!

ஆனால், கவனிக்க வேண்டியது அவைகளையல்ல! இந்த விழாக்களும் கேளிக்கைகளும் நடத்த முடியும் அரசாங்கத்தால். ஆனால் இந்தவிழாவின் போது நாட்டின் நாலுபக்கங்களிலிருக்கும் ஏழை மக்களின் உள்ளம் மகிழ்ந்ததா? "இரண்டாவது சுதந்திர நிறைவு நாள்" என்று மக்கள் மனதில் மகிழ்ச்சி பொங்க, இன்னின்ன நன்மைகளை 'எங்கள்' சர்க்கார் செய்து கொடுத்தார்கள் என்று ஏழைபாட, எங்கும் இன்பம் பொங்கிற்றா? வீட்டுக்கு வீடு, வாசலுக்கு வாசல் குதூகலம் கொந்தளித்ததா?

கேள்விக்குக் கிடைக்கும் பதில் பரிதாபமாகத்தான் இருக்கும். மக்கள் மனதில் "சுதந்திர விழா" என்ற எண்ணம் எழும்பியதாகத் தெரியவில்லை. எக்களிப்பு ஏற்பட்டதாக அறிகுறியில்லை. "எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு, இனி எல்லாம் கிடைக்கும் என்பதே ஆச்சு!" என்ற இசை பிறக்கவில்லை—மாறாக, ஏக்கம் துக்கம், திருப்தியில்லாமை, தீராக் கோபம், ஏழ்மை பிணி எல்லாம் பொங்கி வழிகின்றன! ஆட்சியாளரின் சுதந்திரநாள் அறிக்கையிலிருந்து கட்சித் தலைவர்களின் சுதந்திரதினச் செய்திவரை, எல்லாம் "ஏக்கம்" நிறைந்ததாகவே இருக்கிறது! எதிலும் திருப்தி ஏற்பட்ட நிலை தென்படவில்லை.

மக்கள் இதயங்களில் வேதனை நிறைந்து ததும்புகிறது. அவர்கள் எண்ணங்களில் புது ஒளி பிறக்கவில்லை. புதுநிலை ஏற்பட்டுள்ளது என்ற பூரிப்பில்லை. ஆசைகள், கனவுகள் ஆகிவிட்டனவே என்கிற ஆத்திரம் அவர்கள் இதயத்தில் எதிரொலிக்கிறது. அவர்கள் தங்கள் ஆர்வம் ததும்பும் கண்களைக் கொண்டு "சுயராஜ்யம், சுயராஜ்யம்" என்று கூறப்பட்டதே, அது வந்ததும், வருத்தம் தீரும் என்று எதிர்பார்த்தனர். ஆனால் துன்பம் போய்விடவில்லை. இருக்கிறது, இன்னும் பன்மடங்காக. சுயராஜ்யம் வந்து இரண்டு ஆண்டுகளாகிவிட்டனவே என்று, நன்மைகளை விரல்விட்டு எண்ணமுடியவில்லை அவர்களால், அப்படி எதுவும் இல்லாத காரணத்தால். அதற்குப் பதில் மக்கள் ஆத்திரம் கண்களில் எதிரொலிக்க உரத்த குரலில் கேட்கிறார்கள்.

எங்கே, சுதந்திரம்? இரண்டு ஆண்டுகளாயிற்றே! இதற்குள் இத்தனை அவசரச் சட்டங்கள் ஏன்? அடக்குமுறைகள் ஏன்? வரிச்சுமை ஏன்? வாழ வகையில்லையே ஏன்?" என்று!

பதிலளிக்க முடியாத ஆட்சியாளர் "அறிக்கை"களைத் தருகின்றனர், பொறுமனமே பொறு என்று!

*   *   *

"சுதந்திர சூரியன் உதிக்குது பாரீர்; தொல்லைகள் அத்தனையும் நீங்குது கேளீர்!!"

என்று காங்கிரஸ்காரர்கள் பாடி, மகிழ்ந்து, இரண்டு ஆண்டு "சுயராஜ்ய" ஆட்சியில் கிடைத்த பலன், உணவுநெருக்கடி உடைநெருக்கடி பொருளாதார நெருக்கடி, அரசியல் நெருக்கடி, காங்கிரசுக்குள் நெருக்கடி ஆகியவைகள்தான்! இரண்டு ஆண்டுகள், இருபத்து நான்கு மாதங்கள்—ஆவதற்குள் இத்தனை நெருக்கடிகள்; பிரச்னைகள்!

வெள்ளையர் வெளியேறியது முதல் இன்றுவரை காங்கிரஸ் ஆட்சியின் நெருக்கடிப் பட்டியலை எடுத்தால் நீண்டுகொண்டே போகும். "அவ்வளவு" திறமையுடன் ஆட்சி புரிகிறது, சுதந்திர அரசாங்கம். சுதந்திரம் கிடைத்தபின், நாட்டு மக்களின் நலனுக்காக ஆட்சிப் பீடம் ஏறுவதாக, முழக்கங்களிட்ட காங்கிரசார் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவில்லை. உண்ண உணவு, இருக்க இடம், உடுக்கத் துணி ஆகியவைகள் கூட மக்களுக்குக் கிடைக்கவில்லை. இவைகளையும் "பிரச்னை"களாக்கிக் காட்டி, ஒவ்வொரு மந்திரியும் ஒவ்வொரு மாதிரியாகப் பிரசங்கம் செய்வதில் இருக்கிறார்களே தவிர, கடைத்தேறுவதற்கான வழிகள் காணப்படவில்லை ஆளவந்தார்களின் ஆட்சியில்!

*   *   *

சர்க்காரின் உணவுப் பெருக்கத் திட்டம் (Grow More food Compaign) தோல்வியடைந்து விட்டது. இத்திட்டம் வெற்றிகரமாக இயங்காததற்குக் காரணம், மத்ய சர்க்கார்தான். மாகாண சர்க்கார், மேற்படி திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டுமென்றால் அதற்கான போதிய பணச் சலுகையையும், இயந்திர சாதன உதவிகளையும் செய்து தரவேண்டிய பொறுப்பு மத்திய சர்க்காருடையதாகும். ஆனால் இந்த உதவிகளை மாகாண சர்க்கார்களுக்கு அளிக்க மத்திய சர்க்கார் தவறிவிட்டது. காரணம், மத்திய சர்க்காருக்கும், மாகாண சர்க்கார்களுக்கு மிடையே நெருங்

கிய நேசம் இருக்கவேண்டியதற்குப் பதில், இரு இடத்திலும் இருப்பவர்கள் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாக யிருந்துங்கூட, சரியான ஒத்துழைப்பு ஏற்படவில்லை. நீண்ட நாள் "ஒத்துழையாமை" யிலே இருந்த பழக்கம் போலும்! மாகாண சர்க்கார்களின் போதுமான ஒத்துழையாமை இல்லாத காரணத்தால், ஏழை மக்களின் வரிப் பணமான, நாற்பது கோடி ரூபாய்கள் செலவானதுதான் மிச்சமே தவிர, மேற்படி திட்டம் வெற்றிபெறவில்லை.

பொருள்களைக் கொள்முதல் செய்து அவைகளை மக்களுக்கு அளிக்கும் பொறுப்பு மாகாண சர்க்கார்களுடையது. ஆனால், இந்தப் பொறுப்பை மாகாண சர்க்கார்கள் உணரவில்லை; காங்கிரஸ் மந்திரிகள் உணரவில்லை. இந்த நிலைமைதான் நாட்டில் உணவு நெருக்கடி நிலவுவதற்கான முக்கியகாரணமாகும்.

நாட்டை முன்னேற்ற வழிகளில் கொண்டு செல்லவேண்டுமென்றால், அதற்கான திட்டங்கள் தீட்டப்படவேண்டும் தீட்டப்படும் எல்லாத் திட்டங்களையும் ஒரேயடியாகச் செய்வதென்பது முடியாத காரியம். இது நம் ஆர்வத்தைக் காட்டிக் கொள்ளப் பயன்படுமே யொழிய, காரியம் சித்தியடைய முடியாது. ஆனால், இன்றைய சர்க்காரோ சில திட்டங்களை வைத்துக்கொண்டு அவைகளை நடைமுறையில்கொண்டு வரக் குதிக்கின்றனர். ஒவ்வொரு மந்திரியும், ஒவ்வொரு திட்டத்தை வைத்துக்கொண்டு அவசரப்படுகிறார். இந்த ஒரேயடியான, அவசரம் வீண் பண விரயத்தை உண்டாக்குகிறதே தவிரப், பயனைத் தர முடியவில்லை. பயனைப் பெற வேண்டுமென்றால் மாகாண, மத்திய சர்க்கார்களிடையிலே சுமுகமான நிலை இருக்கவேண்டும். அங்கங்கே இருக்கும் மந்திரி சபையில் ஒரு மந்திரிக்கும், இன்னொருவருக்கும் தகராறு ஏற்படாத நிலை இருக்கவேண்டும்.

மத்திய சர்க்காரை எடுத்துக் கொண்டால், முக்கியமான மந்திரிப் பதவிகளை வகிப்பவர்கள், காங்கிரஸ் கட்சியினர்தான். சில மந்திரிப் பதவிகள் காங்கிரசார் அல்லாதாரிடம் இருக்கின்றன. வருமானத்தைச் சம்பாதித்துத் தரக்கூடியதான சகல பொறுப்புகளும் காங்கிரஸ் சார்பற்ற மந்திரிகளிடமே இருக்கின்றன. ஆனால், மந்திரி சபையின் திட்டம் வகுக்கும் பொறுப்புகளோ காங்கிரசாரிடம் இருக்கின்றன. இதன் விளைவாக, ஏதாவது சங்கடம் ஏற்பட்டால் காங்கிரஸ் சார்பற்ற மந்திரிகளான—நிதி மந்திரி—போன்றவர்கள் கண்டனத்துக்கும் கேலிக்கும் உரியவர்களாகிறார்கள். மந்திரி சபையில் காங்கிரஸ் மந்திரிகளும், காங்கிரஸ் சார்பற்ற—ஆனால் திறமை அதிகம் கொண்ட—மந்திரிகளும் இருக்கின்ற காரணத்தால், பின் குறிப்பிடப்பட்டவர்கள் முன் கூறப்பட்டவர்களுக்கு அடங்கியே நடக்கவேண்டிய நிலையிருக்கிறது. இது மத்திய சர்க்கார் இருக்கும் காட்சியாகும்!

மாகாண சர்க்கார்களோ. தலைவிரிகோலமாக, தாங்கள் நினைத்ததைச் செய்யும் ஆசையும், ஆர்வமும் கொண்டவர்களாக இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, மந்திரி சபைக்குள்ளேயே இரு கட்சிகள் அல்லது பல கட்சிகள் உருவாகி விடுகின்றன. உறவினர்களுக்கு சலுகையும், ஊழலும், இன்ன பிறவும் விரிந்து கொண்டே போகின்றன.

காங்கிரஸ் கட்சியின் நிலையோ சின்னாபின்னமாக இருக்கிறது. பொறாமை, போட்டி, சண்டை, சச்சரவு நிறைந்து கிடக்கிறது. ஒரே குழப்பம்! இங்கிலையில் ஆங்காங்குள்ள அதிகாரிகள், அங்கங்கே உள்ள காங்கிரஸ் பிரமுகர்களுக்குப் "பயந்து" வாழும்படியான நிலை, நிலவுகிறது. காங்கிரஸ் கட்சியின் தலைவர்களும், நாட்டின் அரசாங்கத் தலைவர்களும் ஒருவராகவே யிருக்கிற காரணத்தால், நிர்வாகத் துறையில், எண்ணற்ற சங்கடங்கள் எழும்பிக் கொண்டிருக்கின்றன. எனவே, இரண்டாண்டு காங்கிரஸ் ஆட்சியில் ஊழலையும் ஒழுக்கக் குறைவையும் காண முடிகிறதே தவிர, நாடு நலன்பெறும் வகையைக் காணமுடியவில்லை. சரியாக இயங்கி வரும் இயந்திரம்போன்றிருந்த சர்க்கார் நிர்வாகமும் சீர்குலைந்துபோய் விட்டது—அவ்விதம். ஆகிவிட்டார்கள் ஆளவந்தாரும்' அவர்கள் தம் கட்சியினரும்!

காங்கிரஸ் ஆட்சியின் இந்த இரண்டு ஆண்டுகளிலே வெளிநாடுகளில் இந்தியாவுக்கிருந்த கௌரமும் 'கரையும்நிலைதான் ஏற்பட்டுள்ளது. "ஆசியாவின் தலைமை ஸ்தானம் வகிப்பது இந்தியா" என்று காங்கிரஸ் தலைவர்கள் உரத்த குரலிலே கர்ஜிக்கிறார்களே தவிர, உண்மை வேறுவிதமாக இருக்கிறது. நாடு பெரிதாக இருக்கிறதே தவிர, அதற்கு மேலைநாடுகளிலே இருந்த கௌரவம் மலையேறும் விதமாகவே இருந்துவருகிறது. இரண்டு ஆண்டுக்குள், இந்தியா சர்வதேச பாங்கியிடம் கடன் கோரிவாங்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. மார்ஷல் திட்டம் மூலம் பணம் உதவும்படி அமெரிக்காவைக் கேட்கிறது.

ஆங்கிலேயர், இந்தியாவைவிட்டு வெளியேறியதற்கு இரண்டொரு ஆண்டுகளுக்குமுன் பம்பாய் திட்டம் என்பதாக, இந்தியாவின் தொழில் வளர்ச்சி முதலியவைகளுக்கென ஒரு திட்டம், பிர்லா, டாடா முதலிய "பணமுதலைகள்" அடங்கிய குழுவில், தீட்டப்பட்டது. அதுபோது இந்தியாவிலிருக்கும் பணத்தைக் கொண்டே, கூடியவரையில், இந்தத்திட்டத்தை நிறைவேற்றமுடியும் என்று கூறியிருந்தனர். அதாவது, வெளியாரின் பணஉதவியைக் கோரவேண்டிய அவசியமில்லை என்ற கருத்துப்படஅவர்கள் திட்டம் இருந்தது. ஆனால், இன்று?

நாட்டின்தொழில்வளர்ச்சிக்கெனச் சர்வதேச பாங்கியிடம் கடனும், மார்ஷலை, பணஉதவியும் கேட்கின்றனர் சர்க்கார்! அதுவும் "சுயராஜ்ய" சர்க்கார்!!

அந்நிய ஆட்சி வெளியேறுமுன், நாட்டிலிருக்கும் செல்வத்தைக் கொண்டே, தொழில்துறைமுதலிய வளர்ச்சிகளில் ஈடுபடமுடியும் என்று திட்டம் தீட்டப்பட்டது. ஆனால்ஆங்கில ஆட்சி வெளியேறி, ஆட்சிப்பீடம் ஏறிய "நம்ம" சர்க்கார் 'பணம்இல்லை கடன் வேண்டும்' என்று ஓலமிடுகிறது. இருந்த பணம் எங்கேபோய் விட்டது?

* * *

காங்கிரஸ், முதலாளிகளின் பூஞ்சோலையாக ஆகிவிட்டது. பணமூட்டைகளும், பகற்கொள்ளைக்காரர்களும், பதுங்கு மிடமாகிவிட்டது. எனவே முதலாளித்துவ கட்சியாகி விட்ட காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த

ஆட்சியினர், முதலாளிகள் 'ஆட்டி வைக்கும்படியே ஆடும்படி ஆகிவிட்டனர்! இந்நிலையில், பணமூட்டைகள், கொள்ளையடித்து பதுக்கிவைத்திருக்கும் "பணத்தை" ஒன்றும் செய்யாமல் குவித்து வைத்திருக்கும் பணத்தை — கட்டாயமாக வாங்கவும், சட்ட ரீதியில் அவைகளை நாட்டின் தொழில் துறைகளில் போடவும் செய்யவுமான, நடவடிக்கைகளைமேற்கொள்ள ஆட்சியாளர்களால் முடியவில்லை.

பண மூட்டைகளிடம் பதுங்கிக் கிடக்கும் பணத்தை, வெளிக் கொணரமுடியவில்லை—ஆளும் கட்சி அவர்களின் அடிபணிந்துவிட்ட காரணத்தால்!

எனவேதான் இந்தியா "கடன்" கேட்கிறது சர்வதேச பாங்கியிடம்.

"பூரண சுதந்திரமே எங்கள் இலட்சியம்!" என்று முன்பெல்லாம் முழக்கமிட்டுவந்தவர்கள், பிரிட்டிஷ் மன்னருக்குட்பட்ட காமன்வெல்த் நாடாகஇருக்கச்சம்மதித்துள்ளனர். எது கூடாது என்று கூறிவந்தார்களோ அதுவே தேவையெனக்கூறி, அணைத்துக்கொண்டுள்ளனர்.

இந்தியா பிரிட்டிஷ் காமன்வெல்தில் இருக்க சம்மதித்தது மட்டுமல்ல; எல்லா விஷயங்களிலும் முதலாளித்துவ முன்னணிப் பக்கமே சேர்ந்து வருகிறது. உலகில், இன்று முதலாளித்துவத்திற்கும் பொதுவுடைமைக்குமிடையே பலத்த போட்டி நடைபெறுகிறது. உலகம் இரண்டு கூடாரமாகிவிட்டது. ஒன்று பொதுவுடைமை. இன்னொன்று முதலாளித்துவம். ஒரு பக்கம் ரஷ்யா. இன்னொரு பக்கம் அமெரிக்கா. இரண்டுக்குமிடையே நிலவும் வேற்றுமை வெகு வேகமாக வளர்ந்து வருகிறது. இந்நிலையில் ஆசிய நாடுகளில் முக்கியமானவைகள் பொதுவுடைமைக் கூடாரம் பக்கமே சேர்ந்து வருகின்றன. வளர்ந்துவரும் பொதுவுடைமை — ரஷ்ய — ஆதிக்கத்தைக் கண்ட முதலாளித்துவ நாடான அமெரிக்கா, தன் பணபலத்தால், 'பிறநாடுகளுக்கு உதவி' என்ற போர்வையில் ஏனைய நாடுகளைத் தன் பக்கம் சாய்த்துக் கொள்ளத் தயாரித்து வைத்திருக்கும் திட்டமே மார்ஷல் திட்டமாகும்.

எனவே இரண்டாண்டுக்காங்கிரஸ் ஆட்சியில் நாடு கண்ட பலன் அடக்குமுறைச் சட்டங்களும், துப்பாக்கிப் பிரயோகங்களும், தொல்லைகளும் மட்டுமல்ல; பட்டினியும், பரதவிப்பும், பரிதாபமுமட்டுமல்ல; நிர்வாக ஊழலும், முறைகெட்டநிலையும் மட்டுமல்ல; நாட்டின் 'கௌரவமும்' பறிபோகும்படி ஆகிவிட்டது. "கடன்" கோரும் நிலையும் உண்டாகிவிட்டது! 'சுயராஜ்யம்' வந்த இரண்டு ஆண்டுக்குள்ளேயே இந்த நிலை ஏற்பட்டுவிட்டது. எங்கும் வறண்ட நிலை காட்சியளிக்கிறது! "இல்லை! இல்லை!!" என்கிற கூக்குரல் எதிரொலிக்கிறது. கொஞ்சும் அழகு பூரிக்கும், சோலைவனம் ஆகவில்லை! அங்கு குயிலினங்கள் பாடிடும் நிலையும் ஆகவில்லை!

ஆனால் அதற்குப் பதில் எல்லாத் துறையிலும் பாலையாகவே ஆகிக் கொண்டிருக்கிறது — ஆக்கப்பட்டுக் கொண்டுவருகிறது.

சினிமாக் கொட்டகையைக் குத்தகைக்கு வைத்திருந்தவன், விட்டுச் சென்றுவிட்டான், அதற்கு எந்தக் கேடும்செய்யாமல். இருந்தும், அக் கொட்டகை நிலையாக இருக்கும்படி வைக்கப் படவில்லை அதை யேற்றவனால். அதன் சுவர்கள் கரைந்து வருகின்றன; தூண்கள்மக்கிவருகின்றன; அதனுடைய முன்னிருந்த நிலையும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகச் சீர்குலைந்து கொண்டே போகிறது!

குத்தகைக்கு எடுத்தவன், விட்டுச் சென்றால், கொட்டகை சீர்த்திருத்தப்பட்டு, கொட்டகையிருக்கும் இடம், சுற்றிலும் மரங்கள் எழுப்பப்பட்டு, செடிகொடிகள் வைக்கப்பட்டு, பசுமை நிறை சோலையாக அந்த இடம் விளங்கும் என மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால், ஆசை நிறைவேறவில்லை. அதற்குப் பதில் கட்டிடம் காளான்கள் பூக்குமிடமாகவே ஆகிக்கொண்டிருக்கிறது.

சுயராஜ்யம் வந்தால் சுகம் பெறலாம் என்று மக்கள் கொண்டிருந்த பேரார்வம், மறைந்து போய்விட்டது. அவர்கள் ஆசை இன்று பாலையாகி விட்டதே இது என்று சோலை ஆவது, என்ற ஏக்கமே எங்கும் காணப்படுகிறது.

பாலைவனம், சோலைவனம் ஆகிடத்தான் வேண்டும்! இப்போதுள்ள நிலை நீடித்தால், அது முடியுமா? பாலை, சோலையாக் ஆகுமா? அங்கு பறக்கும் குயிலினங்கள் பாடிட முடியுமா?

விழா முடிந்து விட்டது. சுதந்திரத்திருநாள் எங்கும் கொண்டாடப்பட்டு விட்டது—கொட்டு முழக்கு, கொடியேற்று விழா, கோவிலில் அர்ச்சனை, ரேடியோவில் பிரச்சாரம் என்ற முறையில்!

விழா முடிந்து இரண்டு வாரங்கள் ஆகி விட்டது. விழாவின் ஆர்வமும் குறைந்திருக்கும் இப்போது, விழா நடத்திய ஆயாசம் தீரக் களைப்பாறும் காங்கிரஸ் நண்பர்கள் சிந்திக்க வேண்டுகிறோம், இப்போதுள்ள நிலையின் விளைவு, பயன் தருமா? பாசீசப்பாதையில் நடக்கும் 'நம்ம' சர்க்காரால் நலன் விளையுமா? ஏழ்மைக் குரல் மங்கி, இல்லாமை ஒழியுமா? எல்லா நாடுகள் போலவும், ஏற்றம் பெற வழி பிறக்குமா? என்று!

●

## மதிப்பு ஏற்பட!

"பொருளாதார நிலைமைகள் திருப்திகரமாக இல்லாததால்தான் எப்பொழுதுமே அரசியல் கொந்தளிப்புகள் தோன்றுகின்றன. மக்களின் நம்பிக்கையைப் பெற்ற நம் தலைவர்கள் இதை மனதில் வைத்துக் கொண்டு அரசியலில் இந்த லட்சியங்களை எல்லாம் நிறைவேற்றுவார்களென நம்புகிறேன். மக்களுக்கு சமூக நியாயம் வழங்குவது தாமதப்படுமானால் சமூக நீதியையே அவர்களுக்கு வழங்க மறுப்பதாகுமென்பதை மறந்துவிட வேண்டாம்.

ஜாதி, மதம், பணக்காரன், ஏழை என்ற வித்யாசம் எதுவுமின்றி சகலருக்கும் நீதி வழங்கும் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதே நமது நோக்கம். நமது அரசியலில் சேர்ந்துள்ள இந்தப் பிரகடனங்களை நாம் நிறைவேற்றுவதைப் பொறுத்துத் தான் உலகில் நமக்கு மதிப்பு ஏற்படும்."

என்று, ரஷ்யாவுக்கு ஸ்தானிகராகச் செல்லும் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் தமக்களித்த உபசாரத்தின்போது குறிப்பிட்டுப் பேசியுள்ளார்! நல்ல யோசனைதான்— ஆனால்?

✼

# பகுத்தறிவுவாதி

செழியன்

திருவிளக்கை, அணைத்திடுவது, தென்றலாக இருப்பினும், திருப்தி ஏற்படாது—பாழும் காற்று, படித்துக் கொண்டிருக்கும் நேரத்தில், விளக்கை அணைத்துவிட்டதே, என்று கூறவும், வருந்தவும் தான், எண்ணம் பிறக்கும்.

பகுத்தறிவுக் கோட்பாட்டைப் பாழ்படுத்துவது, நமது பணிவன்பிற்குரிய தலைவரின் செயலாக இருப்பினும், செயலைக் கண்டிக்கத்தான் தோன்றுமே தவிர, செய்தவர் தலைவராயிற்றே, எப்படி அவர் செயலைக் கண்டிப்பது என்ற எண்ணம், உண்மைப் பகுத்தறிவு வாதிக்கு உண்டாகாது.

தமிழ் நாட்டில் சுயமரியாதை இயக்கம் பகுத்தறிவு வளர்ச்சிக்குப் பாடுபட்டது. பகுத்தறிவு என்ற சொல்லை — அறியாமையை அகற்றிடும் சுடரொளியை இருண்ட தமிழகத்தில் ஏற்றிவைத்த பெருமை சுயமரியாதை இயக்கத்தையே சாரும். இருபது நூற்றாண்டுகளாகத் தமிழ் நாட்டை மூடிக்கிடந்த வேத நம்பிக்கைகள், புராண ஆதாரங்கள், மனு மாந்தாதா எழுதிய சட்ட சாஸ்திரங்கள், சொர்க்க லோகம் செல்லக் குறுக்கு வழிகள், சோதிடத்தின் மகிமைகள், கடவுள் துவக்கிக் கொடுத்த பதிகங்கள், பாசுரங்கள், கழுகொத்த பூசுரர்—தம்பிரான்கள் இவைகளனைத்தையும் தாக்கியது அதிர்ந்திடும் வேகத்துடன்—ஆச்சரியப்படும் சக்தியுடன். பகுத்தறிவுப் பிரசாரம் எழுத்துடன் நிற்கவில்லை. மக்களின் மாபெரும் கூட்டங்களில் எந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் பேசப்பட்டது. அத்துடன் மட்டுமல்லாமல் தாம் கொண்ட கருத்துக்களை நடைமுறையில் மக்களிடம் பழக்கத்திற்குக் கொண்டு வரவும் பாடுபட்டது. இதில் முதல் இடமாக எடுத்துக்கொள்ளப்பட்டது கல்யாணக்கூடமாகும்.

* * *

அத்துடன் திருமணப்பந்தல், கூட்டத்தைச் சேர்த்து தரும் இடமாகவும் இருந்தது. உற்றார் உறவினர் ஊரிலிருக்கும் பெரியோர்கள் குறிப்பாகப் பெண்கள் இவர்களிடம் சுயமரியாதைப் பிரசாரம் செய்வதற்கு ஒரு நல்லவாய்ப்பாக இருந்தது. சீர்திருத்தத் திருமணங்கள் நடைபெற்றன. விதவை மணம், காதல்-கலப்புமணம் இவைகளைச் சுயமரியாதை இயக்கம் முன்னின்று நடத்தியது. அதற்காகப் புரோகித மறுப்புச் சங்கம், விதவா விவாக ஆதரிப்புச் சங்கம் முதலியவை ஆரம்பித்து வளர்க்கப்பட்டன. கட்சிக்கும் இந்தக் காரியங்களுக்கும் முதல்வராக நின்று நடத்தியவர் பெரியார்.

* * *

திருமணம் என்பதன் அர்த்தம் பற்றிப் பேசப்பட்டது. வாழ்க்கையின் நறுமணத்தை நுகர மத்தியில் மந்திரம் சொல்லும் தரகர்களோ, சோதிடமோ, பல்லி சாஸ்திரமோ, நாள் நட்சத்திரமோ, தேவையில்லையென்று கூறினார்கள். "குலாச்சாரத்துக்குப் பயந்து, உன் குமரியின் மீது விதவைக் கோலத்தை ஏற்றாதே! வாழ்க்கைப் பூங்காவில் உலவிட அவளுக்கு முழு உரிமையும் உண்டு"

"பணத்துக்காக உன் பச்சிளம் பாவையைப் பலியிடாதே! அவள் வாழ்வு பாலைவனமாகி விடும்" என்றெல்லாம் எடுத்துக்காட்டினார்கள். "சாரதா சட்டத்தைப் போலவே, மணமக்களின் வயது ஏற்றத்தாழ்வுகளைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள் வரவேண்டும்" என்று சுயமரியாதை இயக்கம் கூறியது.

"பெரியவரே! தெருக்கோடியில் இருக்கும் அரசமரத்துக்கும் வேப்பமரத்துக்கும் கலியாணம் நடைபெறப் போவதாகக் கூறுகிறீர்களே! கல்லுக்கும் மரத்துக்கும் காதல் உணர்வு ஏது! கல்யாணம் என்ற சொல்லையே கேலிச் சொல்லாக ஆக்கிவிட்டீர்களே! இந்த அளவுக்கு வீணான செலவும் ஆடம்பரமும் என்? திருமணம் செய்வித்து, அந்த விழாவைக் கண்டு மகிழவேண்டுமென்றால் அதோ! கடன் தொல்லையைச் சுமக்க முடியாமல், திருமணம் என்ற பேச்செடுத்தாலே பெருமூச்செறிந்து, கண்ணீர் சிந்தி, உலவுகிறான் கந்தன். அவனை மணாளனாகப் பெறத் துடி துடிக்கிறாள் வஞ்சி. அவர்களின் குறையைத் தீர்க்க முன்வாருங்கள்! அழகும் இளமையும் பெற்ற அவர்களை ஒன்று சேர்க்க முயலுங்கள். அதற்குத்தான் திருமணம் என்ற அழகிய பெயர் பொருந்தும்" என்று ஊராரிடம் முறையிட்டிருக்கிறது சுயமரியாதை இயக்கம்.

"பள்ளியறையில் தினந்தோறும் அம்மனையும் சாமியையும் தனியே விட்டு வருகிறீர்கள். இதற்கு அர்த்தமிருக்கிறதா? அதுபோகட்டும், போனவருஷத்தில்தான் சாமிக்கும் அம்மனுக்கும் திருக்கல்யாணம் நடத்தினீர்கள். இந்த வருஷம் மறுபடியும் திருக்கல்யாண உற்சவம் என்று ஆரம்பித்துவிட்டீர்கள். நான் சொல்கிறேனென்று கோபித்துக் கொள்ளாதீர்கள். போனவருஷம் நடந்த கல்யாணம் என்ன ஆயிற்று? அம்மனுக்குக் கட்டின தாலியின் கதி என்ன? எந்தக்கோர்ட்டில் விவாகரத்து ஆச்சு?" என்று பெரியார் கூட்டங்களில் பேசும்பொழுது பக்தர்கள் கூடத் தங்களை மறந்து சிரிப்பார்கள்.

"செட்டிநாட்டாரே! வேண்டாம் விபரீதம்! அண்ணாமலையாரின் திருக்கல்யாணமண்டபத்துக்கும், திருமஞ்சன விழாவுக்கும் செலவிடப்படும் பணம், படுகிழவனுக்கும்; பருவம் ததும்பும் மங்கைக்கு நடக்கும் பொருந்தாத் திருமணத்தைப்போன்றது." என்று கண்டன அறிக்கை விட்டோம்.

• • *

பொருந்தாத் திருமணம்? அது ஊரார்முன் பேசப்பட்டது. கேலியாக. எழுத்தில் கையாளப்பட்டது உபமானமாக.

*   *   *

ஆனால் இன்று— பெரியாரின் திருமணத்திற்குப்பின்!

ஊரார் நம்மை — பகுத்தறிவு இயக்கத்தைக்கேலி செய்கின்றனர்.

பெரியாரின் திருமணம் உபமானமாக வழங்கப்படுகிறது.

வைதிகபுரி நம்மைக்கண்டு மிரண்டதுபோய்,

"பகுத்தறிவு வாதியாம்
பெரியாருக்கும்
பாவை மணியம்மையாருக்கும்
கல்யாணமாம் லாலி! லாலி!!"

என்று பாட்டுப் போடுகிறது.

"பகுத்தறிவு வாதி! தவறு என்று தெரிந்தால் விலக்கிடுவார். அன்றித் தான் செய்யப்போகும் காரியத்துக்குத்தக்க காரணங்கள் இருந்தால் காரணங்களைச் சொல்லி நிலையை, விளக்கிடுவார்" என்று கட்சியினர் எதிர்பார்த்தார்கள். அதுநடைபெறவில்லை. எதிர்ப்பு அதிகமாகிறது என்றவுடன் விளக்கங்களும், மறுப்புகளும், மறுப்புக்கு மறுப்புகளும் வெளிவந்தன. அந்த விளக்கங்களில் பெரியார் ஒருசொல்லை-ஏதோ கடைசி பலமான காரணத்தைக் காட்டுபவர் போல் உபயோகப்படுத்துகிறார். அதுதான் பகுத்தறிவு, பகுத்தறிவு வாதி என்றசொற்கள். "படபடப்பில்லாமல் பகுத்தறிவை உபயோகப்படுத்தி யோசித்தால்நாம் செய்தது தவறில்லையென்று தோன்றும்" "பகுத்தறிவுவாதிகளாக இருப்பவர்கள் இதைக்கண்டு ஆச்சரியப்பட மாட்டார்கள்." என்றெல்லாம் விளக்கம் தரப்படுகிறது.

*   *   *

பெரியாரும், அவர்போக்கை இப்பொழுது மறுப்பவர்களும் ஒன்றாக வேலை செய்துவந்தார்கள் பகுத்தறிவு என்ற கொள்கைக்காக; பகுத்தறிவுவாதி என்ற சொல்லை மதிப்புடன் போற்றினார்கள், அதேசொல்லை வீசிப்பார்க்கிறார். அதைத்தாண்டி வராமல் இருக்கிறார்கள் என்று பகுத்தறிவு என்ற லேபிலை ஒட்டுவதன்மூலம் பண்டம் விலையாகுமா என்று பார்க்கிறார். பகுத்தறிவுவாதி என்று சொல்லை எழுதிக்கொள்ளுகிறார், ஆனால், அவருடைய அறிக்கைகள் மதவாதியின் போக்கைக் காட்டுகின்றன.

"நான் சொல்வது வேதவாக்கு,நம் பாதவர்களுக்கு என்மதத்தில் இடங்கிடையாது" என்று மதப் பிரஷ்டம் செய்கிறான் மதவாதி.

"என்னுடைய செயலை ஏற்றுக் கொள்பவர்கள் தவிர, மற்றவர்கள், கட்சியை விட்டுப்போங்கள்" என்று மறுப்பவர்களைக்கட்சியைவிட்டுவிலக்கும் பணியில் பெரியார் ஈடுபட்டிருக்கிறார்.

"என்னைப்பற்றிய புகழ்ச்சியுரையிருக்கலாமேயன்றி, என்குருபீடத்தைப்பற்றிய ஆராய்ச்சியுரை செய்யும் மதச் சபைகளை நான் அனுமதிக்க மாட்டேன்" என்று மதவாதி சொன்னால் "உத்தரவைப் பெறாமல் எத்தகைய கழகமோ, கூட்டமோ, ஆலோசனையோ, யோசனையோ எதுவும் செய்யக்கூடாது" என்கிறார் பெரியார்.

"என்னை எதிர்ப்பவர்கள் மிலேச்சர்கள், சாத்தான்கள், காபீர்கள், மதத் துரோகிகள்" என்று மதவாதி சொன்னால் "என்னை எதிர்ப்பவர்கள், ஏமாந்தவர்கள், வஞ்சகர்கள், அடுத்துக் கெடுப்பவர்கள், எதிரிகள், மகா சூதர்கள், கட்சித் துரோகிகள்" என்று பெரியார் பட்டமளிப்பு விழா நடத்துகிறார். தான் செய்யும் காரியத்துக்குக் காரணமெதுவும் காட்டாமல் அப்படியே நம்பு என்று மதவாதி சொல்வதைப்போல், பெரியாரும் தான் செய்ததை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்கிறார் காரணமெதுவும் காட்டாமல்.

காரண மெதுவும் காட்டாமலா? நன்றாகப் படித்துப் பார்! விடுதலையில் வந்துள்ள அறிக்கைகளை! பெரியாரைப் போற்றி வந்துள்ள நீண்ட கடிதங்களை! பின், சொல் காரணங்களில்லையா என்று? எனச் சிலர் கேட்கிறார்கள்.

பகுத்தறிவின்படி திரட்டப்படும் காரணங்கள் 'காரணங்களாக' இருக்க வேண்டும். அவை ஒழுங்கு பட்டவைகளாக இருக்கவேண்டும். அவை தமக்குள் ஒன்றுக்கொன்று முரண் படக் கூடாது. முடிபுகளை நிரூபி கத் தகுந்த சாட்சியங்கள் இருக் வேண்டும். இவைகளைக் கொண் பார்த்தால் பெரியார் கூறுபவை தகுந்த காரணங்களாக மாட்டா.

கழகத்துக்கும் சொத்துக்கு பிற்கால ஏற்பாடாகச் செய்யப்பட் வாரிசுப் பதிவுத் திருமணம் என் கூறப்பட்டது. கழகத்தின் சம்மத தைப் பெறாமல், கழகத்தின் எதி கால அமைப்பையும் தலைமை பதவியையும் பற்றிச் செய்யப்படு ஏதேச்சாதிகார முடிவு எதையு கழகம் ஏற்றுக்கொள்ளாது என் கழகத்தினர் கூறவும், தலைமை பதவி என்ற பெயர் மறைக்க பட்டது.

திருமணம் என்றதும் படபட புடன் பேசாதீர்கள். கழகச் சொ துக்கும், தனக்கும் வாரிசு உண்டா கிக்கொள்ளச் செய்யப்பட்ட முறை இதுபோலப் பெரிய குடும்பங்களி நடைபெறுவது சர்வ சாதாரண மானது என்று கூறுகிறார். ஆகவே திருமணம் முக்கியமானதல்ல, சொ துக்கு வாரிசு முறைதான் முக்கி மானது என்று ஏற்படுகிறது.

இதிலிருந்து வாரிசு எடுத்து கொள்ளத் திருமணத்தைத் தவி வேறு வழியில்லையா? என்ற கேள் எழுகிறது. வாரிசு முறைக்கு திருமணந்தான் வழி என்றால், பெ யார் பின்னால் விடுத்த அறிக்கைகளி லிருந்து மற்றொரு விபரீதம் காண கிடக்கிறது. மணியம்மையார் மட் மல்ல, இன்னும் நான்கைந்து பே கொண்ட கமிட்டியை வாரிசா நியமிக்கப் போவதாகக் கூறியிரு கிறார். இது உண்மையானால், பெ யார் கொள்கைப்படி, வாரிசாக நி மிக்கத் திருமணந்தான் சிறந்த வழி என்று ஏற்பட்டவுடன், மற்ற நான் பேர்களையும் எப்படி வாரிசுக் கமி டியில் சேர்க்க முடியும்?

இவைகளை விட இடைஞ்சலா மற்றொரு தடை, மணியம்மைய ருக்குத் தம் எழுபதாவது வயதி தமக்குப் பின் வாரிசு ஏற்படுத்தி கொள்ள விரும்பும்பொழுது பெ யார் காரணப்படி என்ன செய் முடியும்? வாரிசாகஏற்படுத்தத் தி மணந்தான் மார்க்கம் என்று மு பெருந்தலைவியை வரன் தேட வேண் டுமா?

பகுத்தறிவுவாதிஎன்ற பெயருக்கு றக் காரணங்கள் காட்டப்பட ல்லை. "ஏற்றுக்கொண்டால் இரு, ல்லாவிட்டால் போடா" என்ற தேச்சாதிகார முறை, மதவாதி ரின் போக்கைக் காட்டுகிறது. தி மார்க்கம் காட்டும் பாதை து. பகுத்தறிவுவாதியின் வழி துவல்ல.

பகுத்தறிவுவாதி! அந்தச் சொல் க் கடக்கப் புருனோ தீயில் இறங்கி ன், கலிலியோ கல்லடிகளைத் தாங் கொண்டான், பெயின் நாட்டை ட்டு வேறு நாட்டுக்கு ஓடினான், ண்ணற்ற இளைஞர்களின் இளங் ங்களில் இரும்புக்கறை படிந்தது. நட்சிறையில் மாண்டோர் பலர், டர்கள் பல வந்தபோது, தலை ழ்ந்தாலும் தன் கருத்தைத் தாழ்த் த வீரர்கள் பலர் அந்தச்சொல் க் காத்தனர்.

அந்தச் சொல்லைப் பெரியாரும் யோகிக்கிறார், சொத்து சுகம் ரிசு இவைகளைக் காப்பாற்ற. அவ டைய திருமணப் பத்திரத் (ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் தந்த பந்தத்தில்) அவர் கொடுத்திருக் பெயர் "இந்து பகுத்தறிவு தி" என்று. இதுவரைக்கும் ரும் அறியாத பாகுபாடு! இந்துப் த்தறிவுவாதி முஸ்லீம் பகுத் வுவாதி, கிருஸ்தவ பகுத்தறிவு தி, பார்சி பகுத்தறிவு வாதி. னும் இந்துப் பகுத்தறிவு வாதிக க்குள் செட்டியார் பகுத்தறிவு தி, ரெட்டியார் பகுத்தறிவுவாதி. டு பகுத்தறிவுவாதி, முதலியார் த்தறிவு என்றெல்லாம் பாகுபாடு க்கப் பட்டாலும் படலாம்! பெரி பகுத்தறிவுக்குத் தரும் டசிபரிசு இந்தப் பாகு தான்.

ான் இந்துவல்ல திராவிடனே று கழகத்தில் பேச்சு. விடுதலைப் திரிக்கையில் நீண்ட வாக்கியங் சுவரொட்டிகள்! ஆனால் தலைவர் னை அறிமுகப்படுத்திக் கொள் முறை "இந்துபகுத்தறிவுவாதி.' ன்பு சர். சண்முகம் சொன்னார் ன் இந்துவென்று கூறிக்கொள் ல் பெருமைப்படுகிறேன்" என்று. று பெரியார் தன்னைக் கூறிக் ள்கிறார் "ஒரு இந்து பகுத்தறிவு தி" என்று.

தலைமையைக் கவிழ்க்க நினைக்கும் சூழ்ச்சிக்காரர்கள் என்றும், குரு பீடத்தை எதிர்க்கும் சீடகோடிகள் என்றும் தூற்றப்படுகின்றனர், பெரியாரின் போக்கை ஒப்புக்கொள்ளாதவர்கள். சொல்லிக்கொடுத்த பாடத்தைக் குருவிடம் ஒப்பிக்கிறீர்களே என்று ஆத்திரப்படுகின்றனர்—பலர் ஆச்சரியப் படுகின்றனர். ஒப்பிக்கவில்லை—ஒப்பித்திருந்தால் இந்தச்சச்சரவு நிலை வந்திருக்காது. பெரியார் செய்ததை, கூறியதை எங்கள் கருத்துடன்—பகுத்தறிவுக் கொள்கைகளுடன் ஒத்திட்டுப்பார்த்தோம், அதன் விளைவுதான் இது.

பெரியார், கட்சியின் தந்தை—தலைவர், பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பியவர், அவரை எதிர்ப்பதா என்று கேட்கிறார்கள். பெரியாரும் இந்தக் கேள்வியைத்தான் எதிர்பார்க்கிறார். இது பக்தி மார்க்கத்தின் கேள்வி. பகுத்தறிவுக்காலம் ஆரம்பமானபொழுது மதவாதிகளும் இந்தக் கேள்வியைத்தான் கேட்டார்கள் "முழுமுதற்கடவுளை எதிர்ப்பதா? அண்டசராசரங்களை உண்டாக்கியவனைப்பற்றிச் சந்தேகங்கள் உண்டாக்குவதா? பரமபிதாவின் படைப்பில் குற்றங்கள் காணுவதா?" என்று கேட்டார்கள். நாம் கூறுகிறோம் "கட்சியின் தலைவரே! உங்கள் கட்சியில் இருக்கிறோம் என்பதாலேயே உங்கள் செய்கைகளையெல்லாம் வியந்து கூறுவோம் என்று எதிர்பார்க்கவேண்டாம். துரோகி, விஷமக்காரர், போன்ற பல கடுஞ்சொற்களை எங்கள்மீது வீசினாலும், உங்கள் செயல் கண்ணியமானது என்று புகழ்ந்துவிடமாட்டோம், எவ்வளவு வேதனைத் தீயில் தள்ளினாலும், எங்களுடைய சம்மதத்தையும் பணிவையும் நீங்கள் பெறமுடியாது. எங்களை நீங்கள் தண்டிப்பதாக நினைத்தால் உங்களையே நீங்கள் தண்டித்துக் கொள்ளுகிறீர்கள்."

கட்சி என்பதிலிருந்து தலைவர் என்ற பதவி பிறந்ததே தவிர, தலைவர் என்ற பதவியிலிருந்து கட்சி பிறந்ததல்ல!!

திரு விளக்கை, அணைத்திடுவது, தென்றலாக இருப்பினும், திருப்தி ஏற்படாது—பாழும் காற்று, படித்துக் கொண்டிருக்கும் நேரத்தில், விளக்கை அணைத்து விட்டதே, என்று கூறவும், வருந்தவும் தான், எண்ணம் பிறக்கும்.

பகுத்தறிவுக்கோட்பாட்டைப்பாழ் படுத்துவது, நமது பணிவன்புக்குரிய தலைவரின் செயலாக இருப்பினும், செயலைக் கண்டிக்கத்தான், தோன்றுமே தவிர, செய்தவர் தலைவராயிற்றே ஏப்படி அவர் செயலைக் கண்டிப்பது என்ற எண்ணம், உண்மைப் பகுத்தறிவு வாதிக்கு உண்டாகாது.

●

## மாஜி கடவுள்கள்

4-ம் பக்கத் தொடர்ச்சி

யம் பாடிய கிரேக்க நாட்டிலே இன்று இல்லை. அறிவு துலங்கியதும், அந்த அஞ்ஞானம் தொலைந்தது.

ஹீராதேவியாருக்கு, வானவில் தான், தூது செல்லும் தோழி, என்றான், கிரேக்கப் புராணிகன்—இன்று விஞ்ஞானி வானவில் அமைப்பை விளக்குகிறான், அங்கு. இங்கோ, உருண்டு கிடக்கும் கல்லைக்காட்டி, இது கண்ணன் உருட்டிவைத்த வெண்ணெய் என்றும், தேய்ந்து இருக்கும் கல்லைக் காட்டி, இது துரோபதை, மஞ்சள் அரைத்த இடம் என்றும் கூறி, நம்பாதவனை நாத்திகன் என்றும் தூற்றுகிறார்கள்!

ஹீராவுக்கு ஒருகாலத்தில்கிரேக்க நாட்டில் இருந்துவந்த செல்வாக்கு, கொஞ்சமல்ல! ஹீராவையே, ரோம் நாட்டவர், ஜூனோ, எனற பெயர் சூட்டித்தொழுது வந்தனர்.

ஆர்கோஸ், ஸ்பார்ட்டா, மைசின், எனும் தலங்கள் இருந்தன—ஹீரா தேவியாருக்கு. மக்கள் மூவர், தேவிக்கு! பூஜை, பலம்; கோயில், பிரமாண்டம்!

ஆனால் இன்று இவை எல்லாம், புராணப்புளுகாய், புத்துலகுக்குத் தோன்றுகின்றன.

மயிலும் குயிலும் பசுவும் உடனிருக்க, தங்கப்பீடத்தமர்ந்து, வானவில்லைத் தோழியாகக்கொண்டு அரோச்சிய ஹீரா தேவியாருக்கு, இன்று, பாழ்மண்டபமோ, அகல் விளக்கோ, திருநாளோ, நோன்பு கொண்டாடுவோரோ இல்லை! அறிவு பிறந்ததும், ஹீரா, மாஜிகடவுளாகி விட்டார்! ஆனால், மாரி, இங்கு ஆட்சி புரிகிறாள், இன்றும்!!

*

# * படிப்பகம் *

## திராவிட நாடு (முதல் பாகம்)

ஆசிரியர் :— அ. கு. பாலசுந்தரனார் B. A., L. T.

தோழர்களின் நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றி வைத்துள்ளார் இந்நூல் ஆசிரியர். 'திராவிட நாடு' பற்றி, அதன் நீர்வளம், நில வளம், எல்லை, பரப்பு, மலைகள், சுரங்கப் பொருள்கள், வியாபாரப் பொருள்கள், துறைமுகங்கள், ரயில் பாதை முதலிய சகல விஷயங்கள் குறித்தும் தெளிவாக விளக்கும்—வகையில் ஒரு பூகோள நூல்போல —இந்நூல் இருக்கிறது. மிகுந்த முயற்சியின் விளைவுதான் இந்த நூல்.

'திராவிட நாடு' தனித்து இயங்க முடியுமா, என்று கேட்பவர்கள் இதைப் படித்தால் 'ஏன் முடியாது?' என்று அவர்களே கேட்க ஆரம்பித்து விடுவர். பல ஆண்டுகளாகப் பள்ளி ஆசிரியராகப்பணியாற்றிவரும் இந்நூல் ஆசிரியர் தன் அனுபவம், இடைவிடா முயற்சி, ஆகியவைகள் மூலம் இந்நூலைத் தந்துள்ளார் திராவிடத்துக்கு.

கழகத் தோழர்கள் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டிய நூல் இது

கிடைக்குமிடம்:— தனலட்சுமி பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை. விலை ரூ. 2

* * *

## களஞ்சியம்

ஆசிரியர் :— இரா. நெடுஞ்செழியன், M. A.

களஞ்சியம், காலண்டர், சினிமா ஆகிய மூன்று பொருள் விளக்கக் கட்டுரைகள் அடங்கிய நூல். யாவரும் அறிந்துகொள்ள வேண்டிய இந்த மூன்று பொருள்கள் பற்றியும் தெளிவாக, அவைகள் வரலாறு—வளர்ந்த வகை—ஆகியவைகளை முறையே தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், இரா. செழியன், ப. வாணன் ஆகியோர் வடித்துத் தந்துள்ளனர், அறிவுலகம் மகிழுவண்ணம். முயற்சி பாராட்டுக்குரியது. கருத்துப் புதையல்கள் கொண்ட சிறு களஞ்சியம் — இந்நூல்.

கிடைக்குமிடம்:— திராவிடன் பதிப்பகம், வேலூர் (வ. ஆ.) விலை அணா 8

• • •

## சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர்

ஆசிரியர் :— சி. என். ஏ.

நாட்டில் பொதுவுடைமையை வித்திட்ட பெருமை கொண்ட சிந்தனைச் சிற்பி சிங்காரவேலரைப் பற்றி சி. என். ஏ. முன்பு எழுதியிருந்த கருத்துரைகள் அடங்கிய நூல். 'வெட்டுக்கிளிகளும் பச்சோந்திகளும் புகழப்பட்ட நேரத்தில் புரட்சிப் புலியான சிங்காரவேலரை மக்கள் மறந்தனர். அந்த அழியாத புரட்சிப் புலியைப் பற்றிய விளக்கவுரைகள் இந்நூலில் உள்ளன.

விலை அணா 0—4—0

வெளியிட்டோர் :— மீன் பிடிப்போர் சங்கம், திருவல்லிக்கேணி (கிளை)

## பிச்சைக்காரி

ஆசிரியர் :— ஜலகண்டபுரம் ப. கண்ணன்.

சாதிக் கட்டுப்பாடு அவள் காதல் மொட்டைக் கருக்கிற்று. வேதனையில் தள்ளப்பட்ட அவள் வாழ்வு, பல விபரீத நிகழ்ச்சிகளைச் சந்தித்தது. முடிவில் அவள் ஒரு பிச்சைக்காரியானாள்!

சிந்தனையைத் தூண்டும் சிறு நாவல். சமுதாய ஊழல்களைப் படம் பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர்.

பெறும் இடம்:— திராவிட மணி பதிப்பகம், தெப்பக்குளம், திருச்சி. விலை அணா 3.

* * *

## கயிற்றில் தொங்கிய கணபதி

ஆசிரியர் :— மு. கருணாநிதி.

தமிழ் மகன் கணபதி, மலேயாவில் தூக்கு மேடை ஏற்றப்பட்டான். வளம் கொழிக்கும் நாடிருந்தும், வாழ வழியில்லாது திரை கடல் கடந்து சென்ற அவன் வாழ்வு சிதைக்கப்பட்டது.

இது ஏன்? என்பது விளக்கப்படுகிறது இந்நூலில்.

பெறும் இடம்:— அறிவுப் பண்ணை 6, மங்கம்மாள் தெரு, (மின்ட் போஸ்ட்) சென்னை 1.
விலை அணா 3

* * *

## முஸ்லிம் லீக் சரிதை

ஆசிரியர் :— மௌலவி அபுல் ஹாஸன் ஹாதலி.

எடுத்த இலட்சியத்தில் வெற்றி கண்ட முஸ்லிம் லீகின் வரலாறு, நிகழ்ச்சித் தொகுப்புகளுடன், அழகான முறையில் தரப்பட்டிருக்கிறது.

வெளியிட்டோர் :— இக்பால் பப்ளிஷிங் ஹவுஸ், அடியக்கமங்கலம்; தஞ்சை Dt. விலை ரூ. 2

* * *

## அசோகன்:

ஆசிரியர்:- பா. பாண்டியன்.

அசோகன் உள்ளம் அன்புப் பாதையில் திரும்பிய கலிங்கப் போரை வைத்துப் பின்னப்பட்ட நாடக நூல்.

விலை ரூ 1.

கிடைக்குமிடம்:-
இன்பநிலையம்
சங்கர்நகர் புதூர்
மதுரை

* * *

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street, Kancheepuram.